யாழ்ப்பாணம்

Registered as a Newspaper    பக்கங்கள் 06    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    கார்த்திகை 27    (12-12-93)    ஞாயிற்றுக்கிழமை    ஓசை 297

## 250 கிலோ. குண்டுகளையே கிளிநொச்சியில் புக்காரா வீசியது

கிளிநொச்சியில் விமானத்திலிருந்து 250 கிலோ கிராம் நிறையுடைய குண்டு ஒன்று வீசப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் காலை புக்காரா விமானம் ஒன்றும், சியாமசெட்டி விமானம் ஒன்றும் கிளிநொச்சி கிராமங்களைச் சுற்றி வட்டமிட்டு குண்டுத் தாக்குதலை மேற்கொண்டன. இத்தாக்குதலின் போது வீழ்ந்து வெடித்த குண்டு ஒன்று 250 கிலோ கிராம் நிறையுடையதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குண்டின்பாகத்தில் குறிக்கப்பட்டிருந்ததை அவதானித்தபோதுஇதுதெரியவந்துள்ளது.

# பல்லாயிரம் மக்கள் திரண்ட பூநகரி தளம் தகர்ப்பு வெற்றி விழா

## தென்மராட்சியில் அணிவகுப்புக்கள், ஊர்திகள், காவடிகள் பவனி

(நமது நிருபர்)

பூநகரி கூட்டுத்தளம் 'ஒப்ரேசன் தவளை' மூலம் தகர்க்கப்பட்ட வெற்றிநாளகளின் முதல் நாள் நிகழ்வுகளில் நேற்று மாபெரும் பொதுக் கூட்டம் தென்மராட்சிக் கோட்டத்தில் மட்டுவில் மகாவித்தியாலயத்தில் சிறப்புற நடைபெற்றது.

பொதுக் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர், வேதக்கேணி கந்தசுவாமி கோவிலடியிலிருந்து மங்கள இசை அணிவகுப்பு ஊர்திகள்பவனி காவடி பவனி, என்பன ஆரம்பமாகி கூட்ட மைதானம் வரை வந்தன. இவ் அணிவகுப்பினை பெருமளவு மக்கள் வீதியின் இரு மருங்கிலும் குழுமிநின்று பார்வையிட்டனர். இவ் அணிவகுப்பில் முதலில் மகளிர் படையணியும் அடுத்து கடற்புலிகளின அணியும், மாணவர் அமைப்பின் பாண்ட் வாத்தியம் முழங்க அணிவகுத்து கூட்ட மைதானத்தை வந்தடைந்தன மைதானத்தில் மரியாதை அணிவகுப்பு நடைபெற்றது. பின்னர் பூநகரி கூட்டுத்தளம் தகர்ப்பில் வீரகாவியம் படைத்து வீரச்சாவடைந்த மாவீரர்களின் உருவப்படங்களுக்கு மக்களும் போராளிகளும் மலரஞ்சலி செலுத்தினர். அடுத்து மங்கள இசை இடம்பெற்றது

பொதுக் கூட்டம் 5-00 மணியளவில் சாவகச்சேரி வட்டப் பொறுப்

(5ஆம் பக்கம் பார்க்க)

# சிசில் வழங்கிய பதவி உயர்வு;

# அதிகாரிகள் பலத்த ஆட்சேபம்

## வெற்றிநாள் கூட்டம் இன்றுபல்கலைகழகத்தில்

பூநகரி கூட்டுத் தளத்தின் மீதான ''தவளைத் தாக்குதலின்'' வெற்றி விழா இன்று பி. ப. 04 00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. மேலும், இத் தாக்குதலில் உயிர்த் தியாகம் செய்த 458 புலிவீரர்களின் வீரத்தை நினைவு கூரும் வகையில் விசேடமாக அமைக்கப்பட்ட பொதுப்பந்தலில் அவர்களின் உருவப் படங்கள் வைக்கப்பட்டு, பெற்றோர்களினால் காலை 10 00 மணிக்கு ஈகச்சுடர் ஏற்றி வைக்கப்படும்.

இப்பொதுக் கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் அணி

(6ஆம் பக்கம் பார்க்க

## சிரேஷ்ட அதிகாரிகள் பாதிப்பென பாதுகாப்பு அமைச்சிற்கு முறையீடு

(கொழும்பு)

அண்மையில் சிறிலங்கா இராணுவத்தினருக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வுகள் தொடர்பாக இராணுவத்தில் ஒரு ''குதியினர் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளகோடு பதவி உயர்வுகள் நியாய மற்றவை எனவும் பாதுகாப்பு அமைச்சுக்கு சுட்டிக்காட்டியும் உள்ளனர் இதனைத் தொடர்ந்து மேலும் பல பதவி உயர்வுகளும் இராணுவ அமைப்பில் பாரிய மாற்றங்களும் விரைவில் மேற்கொள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தீர்மானித்திருப்பதாகவும் இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். இதேவேளை அண்மையில் இராணுவத்தில் மேற்கொள்

## ஒரு தளபதி பதவி விலகுவதென்பது அவர் கொல்லப்பட்டதற்கு சமம்!

### வெற்றிவிழா கூட்டத்தில் மூத்ததளபதி கருணா

எமது விடுதலைப்போராட்டத்தைக் களங்கப்படுத்தும் நோக்கோடு எம்மைப் பயங்கரவாதிகள் என்றும் மனித உரிமைகளை மீறுபவர்கள என்றும் பிரசாரம் செய்து வரும சிறிலங்கா அரசு எமது மக்கள் பிரயாணம் செய்யும் போக்குவரத்துப் பாதையில்

புலிகளின் மூத்த தளபதி கருணா நேற்று மட்டுவிலில நடைபெற்ற பூநகரித் தளம் தகர்ப்பு வெற்றி விழாவில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது,

இப்போராட்டத்தின் மூலம்

விளைவு பூநகரி இராணுவ முகாம் தகர்ப்பிலோ அல்லது கிளாலிப் போக்குவரத்துப் பாதையின் உறுதிப்பட்டிலோ மட்டும் அமைந்துவிடவில்லை ஒரு இராணுவத்தளபதி பதவி விலக வேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்கின்றது ஒரு தளபதி பதவி விலகியது

மேலும், இத் தாக்குதலில் உயிர்த் தியாகம் செய்த 458 புலிவீரர்களின் வீரத்தை நினைவு கூரும் வகையில் படும்.

இப்பொழுதுக் கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் அணி

(6ஆம் பக்கம் பார்க்க)

# சிரேஷ்ட அதிகாரிகள் பாதிப்பென பாதுகாப்பு அமைச்சிற்கு முறையீடு

(கொழும்பு)

அண்மையில் சிறிலங்கா இராணுவத்தினருக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வுகள் தொடர்பாக இராணுவத்தில் ஒரு பகுதியினர் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதோடு பதவி உயர்வுகள் நியாய மற்றவை எனவும் பாதுகாப்பு அமைச்சுக்கு சுட்டிக்காட்டியும் உள்ளனர் இதனைத் தொடர்ந்து மேலும் பல பதவி உயர்வுகளும் இராணுவ அமைப்பில் பாரிய மாற்றங்களும் விரைவில் மேற்கொள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தீர்மானித்திருப்பதாகவும் இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். இதேவேளை அண்மையில் இராணுவத்தில் மேற்கொள்ளப்பட்ட பதவி உயர்வுகள் தற்போதைய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்திய ரெட்னாவால் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் வழங்கப்பட்ட பதவி உயர்வுகள் யுத்தப்பிரதேசத்தில் தற்போது செயல்படும் இராணுவ அணிகளுக்கே வழங்கப்பட்டுள்ளன. இப்பதவி உயர்வின்போது சேவை கவனிக்கப்படவில்லை என பலர் பாதுகாப்பு அமைச்சுக்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் எதிர்காலத்தில் இராணுவ படை அணிகளுக்கு பொறுப்பாக லெப்டினன்ட் கேணல் தரத்துக்கு குறைந்த எவரும் நியமிக்கப் படக்கூடாது எனவும் இதற்கு அமையவும் மேலும் எதிர்கால இராணுவ நடவடிக்கைகளுக்கு வசதியாக இராணுவ அமைப்பில் பல மாற்றங்கள் அடுத்த வருட ஆரம்பத்தில் மேற்கொள்ளப்படவுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இம்மாத இறுதியுடன் சிசில்ஓய்வுபெறுகிறார்.

(கொழும்பு)

சிறிலங்காவின் இராணுவத் தளபதி சிசில் வைத்திய ரட்னா இம்மாதம் 31ம்திகதியிலிருந்து ஓய்வு பெறுகிறார். பதவியிலிருந்து ஓய்வு பெற வேண்டுகோள்விடுத்து ஜனாதிபதிக்கு அவர் அனுப்பிய கடிதம் சிறிலங்கா ஜனாதிபதியால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தாக ஜன திபதி செயலகம் அறிவித்துள்ளது.

இவர் அடுத்தவருடம் மே மாதம் வரை பதவி வகிக்கக் கூடியதாக இருந்தும் இவ் வருட இறுதியுடன் ஓய்வு பெறுகின்றமை குறிப்பிடத்

(6ஆம் பக்கம் பார்க்க)

## 'மார்க்கோ' கப்பல் மண்ணெயுடன் வந்தது

(வடமராட்சி)

கொழும்பில் இருந்து புறப்பட்ட 'மார்க்கோ' கப்பல் நேற்று காலை 9 மணியளவில் பருத்தித்துறை இறங்குதுறைக்கு வந்தது. இக்கப்பலில் 70 பயணிகள் வந்தனர்.

மேலும் யாழ். அரச அதிபரின் பெயரில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 4 ஆயிரத்து 384 பரல் மண்ணெண்ணையும் அரச அதிபரின் பெயரில் 119 பரல் மண்ணெண்ணையும் போரூட் நிறுவனத்திற்கு 2 பரல் எரிபொருள் ஒரு கம்பியூட்டர் கருவி, மற்றும் டிசம்பர்மாத ஓய்வூதிய வவுச்சர்களுடன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்காவிற்கான ஆயுத விற்பனை; பிரிட்டன் அரசு நிறுத்த வேண்டும்

## பிரிட்டிஷ் எம்.பி. கோரிக்கை

(லண்டன்)

சிறிலங்காவிற்கான ஆயுத விற்பனையைபிரிட்டன் நிறுத்திக் கொள்ளல் வேண்டுமென பிரிட்டனின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான ஜெரி கோபின் கூறியுள்ளார்

லண்டனில்அண்மையில்நடந்தகூட்டமொன்றில் பேசிய போது தெரிவித்தார் மேலும் கூறுகையில் இலங்கையில தமிழர்கள் படுகொலைசெய்யப்படுவதைக்கண்டித்ததுடன் சிறிலங்காவிற்கான ஆயுத விற்பனையை நிறுத்தி தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை சிறிலங்கா அரசு ஏற்றுக் கொள்ள நிர்ப்பந்திக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தார்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய மற்றுமொரு பிரிட்டன் பாராளுமன்றஉறுப்பினர் சிறிலங்காவிற்கு ஆயுத விற்பனை செய்வதன் மூலம் மனித உயிர்கள் கொல்லப் படுவதற்கு உடந்தையாக இருப்பதாகவும், மக்களின் உயிர்களைவிட ஆயுத விற்பனை செய்வது அவசிய மற்றது என்றும் சுட்டிக்காட்டினார். பிரிட்டன் அரசு தனது உதவிகள் எவையும் மனித உரிமைகள் மீறப்படுவதற்கு பயன்படுத்தப்படவில்லை என்பதை உத்தரவாதப்படுத்திக்கொள்ளவேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

## ஆயுதக் கொள்வனவு; விசாரணைக்குழு அமைப்பு

(கொழும்பு)

சிறிலங்காப் படையினருக்கான ஆயுதக்கொள்வனவுகள் போது பெருமளவில் தரகுப்பணம் பெறப்பட்டதாகக் கூறப்படுவதையிட்டு விசாரணை நடத்த விசாரணைக் குழுவொன்றை சிறிலங்கா அரசு நியமித்துள்ளது. ஆயுதக்கொள்வனவு மற்றும் எம். ஐ. ரக உலங்கு வானூர்திக் கொள்வனவு என்பவற்றின் போது பெருமளவில் தரகுப்பணம் பெறப்பட்டதாகக் கூறப்படுவது தெரிந்ததே இவ் விசாரணையின் போது முக்கிய அரசியல்வாதிகள் சிலரும் இராணுவ உயர் அதிகாரிகள் சிலரும் விசாரணைக்கு உட்படுத்தப் படலாம் என்றும் தெரியவருகிறது.

## இணைப்பு

''பூநகரியில் களம் கண்ட வரலாற்று நாயகர்கள்'' எனும் வீரச்சாவு அடைந்த போராளிகளினது படத்தை தாங்கிய இணைப்பு இன்று தென்மராட்சி பிரதேசம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் ஈழநாதத்துடன் விநியோகிக்கப்படும். தவறாது பெற்றுக்கொள்ளவும்.

## யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதி

(நமது நிருபர்)

கனகபுரத்தில் நேற்று முன்தினம் சிறிலங்கா போர் விமானங்கள் நடாத்திய தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த பெண்

(5ஆம் பக்கம் பார்க்க)

# ஒரு தளபதி பதவி விலகுவதென்பது அவர் கொல்லப்பட்டதற்கு சமம்!

## வெற்றிவிழா கூட்டத்தில் மூத்ததளபதி கருணா

எமது விடுதலைப்போராட்டத்தைக் களங்கப்படுத்தும் நோக்கோடு எம்மைப் பயங்கரவாதிகள் என்றும் மனித உரிமைகளை மீறுபவர்கள என்றும் பிரசாரம் செய்து வரும சிறிலங்கா அரசு எமது மக்கள் பிரயாணம் செய்யும் போக்குவரத்துப் பாதையில் கொலைகளையும் மனித உரிமை மீறல்களையும் செய்து வந்துள்ளதென்பது அனைத்து மக்களுக்கும் நன்கு தெரியும்

ஆயுதமேந்திய போராளிகளையும் அப்பாவிப் பொது மக்களையும் பிரித்துப்பார்க்க முடியாத சிறிலங்கா அரசு மனித உரிமைகள் பற்றி பேசுவதில் எந்தவித அர்த்தமும் இல்லை. இவ்வாறு விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கருணா நேற்று மட்டுவிலில நடைபெற்ற பூநகரித் தளம் தகர்ப்பு வெற்றி விழாவில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது,

இப்போராட்டத்தின் மூலம் பெரும் அழிவுகளையும் இழப்புக்களையும் நாம் சந்திக்க வேண்டி ஏற்படும். 'தவளை' நடவடிக்கையின்போது வீரச்சாவெய்திய 458 போராளிகளினால் இன்று கிளாலிப் போக்குவரத்துப் பாதைக் கொலைகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இதைஒருவராலும் மறுக்கமுடியாது.

தவளை நடவடிக்கையின் விளைவு பூநகரி இராணுவ முகாம் தகர்ப்பிலோ அல்லது கிளாலிப் போக்குவரத்துப் பாதையின் உறுதிப்பட்டிலோ மட்டும் அமைந்துவிடவில்லை ஒரு இராணுவத் தளபதி பதவி விலக வேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்கின்றது ஒரு தளபதி பதவி விலகியது அத்தளபதியைக் கொன்றதற்குச் சமமாகும். அத்துடன் இராணுவ அதிகாரிகளின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணை சிறிலங்கா இராணுவத்தின் நம்பிக்கை இன்மையை உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளது

இந்நிலையில் பலவீனம் அடைந்திருக்கும் சிறிலங்கா

(6ஆம் பக்கம் பார்க்க)

# இந்த வெற்றிவிழா தமிழீழத்தின் ஆரம்ப அடிக்கல் நாட்டுவிழா

## புதுவை இரத்தினதுரை தெரிவிப்பு

(நமது நிருபர்)

''இந்தவிழா தமிழீழத்தின் பிறப்பு விழா நாளை பெறப்போகின்ற தமிழீழத்திற்கான ஒரு ஆரம்ப அடிக்கல் நாட்டு விழாவாக இதனைக்கொள்ள வேண்டும். பூநகரி கடற்படை கரைப்படைக் கூட்டுத்தளம் மீது உங்களது பிள்ளைகள் பாய்ந்த செய்தி உங்களது காதுகளில் வந்து எட்டும் போதே உங்களதுபிள்ளைகள் வெற்றியை பெற்றிருந்தார்கள்'' இவ்வாறு மட்டுவிலில் பூநகரி வெற்றி நாள் கூட்டத்தில் உரையாற்றிய கலைபண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்;

ஓரிரவில் விடுதலைப் புலிகளுக்கு பத்துக்கைகள் முளைத்தன என்று சிங்களப் பத்திரிகைகள் எழுதும் அளவிற்கு உங்களுடைய பிள்ளைகள் வீரத்தை விளைவித்தனர்.

இந்த யுத்தம் தமிழீழத்தில் தேசியத்தின் சகல பகுதிகளில் இருந்தும் உங்களுடைய பிள்ளைகள் வீரர்கள் எல்லாருமே ஒன்றிணைந்து நடாத்திய ஒரு தேசியத் தாக்குதல். இந்தத் தாக்குதலை எங்களுடைய தேசியத் தலைவரே வழி நடத்தினார். படை நடத்தினார்.

இந்த பூநகரி இராணுவ முகாம் தகர்ப்பிற்குப் பின்னர் முக்கிய இராணுவ முகாம்களை பலப்படுத்த வேண்டிய தேவை ஒன்று சிறிலங்கா இராணுவத்திற்குஏற்பட்டது.

கொண்டச்சி, சிலாவத்துறை போன்ற இராணுவ முகாம்களை மூடவேண்டிய தேவை ஒன்று ஏற்பட்டது. சிறிலங்கா இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்னா ராஜினாமா செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. தோல்வியுறும் இராணுவத்திற்கு தலைமை தாங்கப் போவதில்லை என்று கூற வேண்டிய ஒருதேவை ஏற்பட்டது. இது மட்டுமா சிறிலங்கா விமானப்படையின் யுத்த விமானங்கள் எங்கே நிறுத்துவது என்று இன்னும் முடிவெடுக்க முடியாதநிலை.

இந்த வெற்றி பலாலி முகாமை பூநகரி முகாமைப் போல் விரைவில் விடுதலைப் புலிகள் தாக்குவார்கள் என்ற ஒரு நம்பிக்கை அவர்களுக்கு ஏற்படுத்தியிருக்கின்றது.

இதுவரை எங்கள் கைகளுக்கு கிட்டாத பெறுமதி மிக்க ஆயுதங்கள் கிட்டின. சிறிலங்கா பத்திரிகைகளின் கணக்கின்படி 100 கோடி ரூபா அந்த ஆயுதங்களின் பெறுமானம்.

''பூநகரி கூட்டுப் படைத்தளம் மீதான இந்த வெற்றி வெறும் ஆயுதம் பெறுவது மாத்திரமல்ல ஆயுதங்கள் தானாக எழுந்து சென்று படைத்தளத்தை தாக்கப் போவதில்லை. அந்தக் கருவிகளைத் தாங்குவதற்கு சுமப்பதற்கு போராளிகள் எங்களுக்கு வேண்டும்''

உண்மையிலேயே இது ஒரு

(5ஆம் பக்கம் பார்க்க)

## முள்ளிக்குளம் பகுதியில் புக்காரா தாக்குதல்

(மன்னார்)

மன்னாரில் நேற்று மதியம் 12.40மணியளவில் புக்காரா விமானம் குண்டு வீச்சுத் தாக்குதலையும் ரொக்கட் தாக்குதலையும் மேற்கொண்டது. முள்ளிக்குளம் பகுதியில் நடைபெற்ற இத்தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

## வரி விளம்பரம்

### கலட்டி ஸ்ரீ கற்பகவிநாயகர் கதை

29-11-93 தொடக்கம் 19-12-93 வரைக்கும் மாலை நாலு மணிக்கு விநாயகப் பெருமானுக்கு விசேட அபிசேகமும், லட்ச அர்ச்சனையும் ஹோமமும். பூர்த்திநாள் 19-12-93 விசேட கணபதி ஹோமமும் நடைபெறும். தேவஸ்தான பிரதமகுரு மகாகணபதீஸ்வரக் குருக்கள் தலைமையில் பிடல சிவாச்சாரியார்கள் கலந்து கொள்வார்கள். (6859)

### விற்பனைக்கு

கடைக்கு தேவையான கண்ணாடி அலுமாரி (8 அடி X 6 அடி) - 1 ஷோகேஸ் - 2, விராக்கிகள் - 4, 2 அங்குல சதுர இரும்புவலைகள், தொடர்பு; B J. நவரத்தினம், 391 மட்டுவில் தெற்கு சாவகச்சேரி. (6778)

### பசன் பழம் தேவை

உங்கள் வீட்டுத் தோட்டங்களில் உள்ள பசன் பழங்களை (Passion Fruit) நாம் கொள்வனவு செய்கின்றோம். TASTE LINE INDUSTRIES (PVT) LTD, 14, Seenier Lane, Jaffna: (சி-8096)

### புலமைப் பரிசில் வகுப்பு

ஆண்டு 5 புலமைப்பரிசில் 1994 கல்வியாண்டிற்கான புதிய வகுப்புக்கள் 14-12-93 செவ்வாய் பி. ப. 3-00 மணிக்கு ஆரம்பமாகும். ஆசிரியர் அம்பிகைபாகன், மாதாந்தப் பயிற்சிப் பரீட்சைகள் நடைபெறும். புதிய கல்வி நிலையம் 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம், (6843)

## மிருத்திஞ்ஜய ஹோம அழைப்பிதழ்

இடம்: நல்லூர் சிவன் கோவில்
காலம்: 12-12-1993 ஞாயிறு பிற்பகல் 12 மணி தொடக்கம் 2 மணி வரை

தலைமை: சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவக் குருக்கள் அவர்கள்

பூநகரி கூட்டுப்படைத்தளம் தகர்ப்பு வெற்றியை வாழ்த்தியும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆசி வழங்கியும், எமது தேசியத் தலைவர் மேலும் பல வெற்றிகள் பெற பிரார்த்தித்தும் இந்துமத குருமார் ஒன்றியம் நடத்தும் ஜெப, ஹோம, அபிஷேக பிரார்த்தனையில் தமிழீழ மக்களையும் அனைத்து இந்துமத குருமார்களையும் கலந்து சிறப்பிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

வேதபாராயணம்:

இந்துமத குருமார் ஒன்றிய குருகுல மாணவர்கள்
சிவானந்த குருகுல மாணவர்கள்
தர்மசாஸ்தா குருகுல மாணவர்கள்
ஸ்ரீதேவி குருகுல மாணவர்கள்

நன்றி

22, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
10-12-1993.
(சி 8105)

இப்படிக்கு
சிவஸ்ரீ. ஐ கை. இராஜேஸ்வரக் குருக்கள்
அமைப்பாளர்
இந்துமத குருமார் ஒன்றியம்

## 31-ம் நாள் கண்ணீர் அஞ்சலி

# கப்டன் காஞ்சனா

பிறப்பு: 15-09-1968
வீரச்சாவு: 11-11-1993

விடுதலை நாடி வீறுநடை பயின்று விந்தை பல தரணியிலே படைத்து அடிமைதனை கலைய ஆதவனாய் உதிர்ந்த அன்பே "தவளை" என்ற சமரிலே படை வெல்ல அணியான காஞ்சனா பைந்தமிழின் மாமலர்கள் சாற்றுகின்றோம்.

பெரியநீலாசனை, உயிலங்குளம், மன்னார்.

தாய், சகோதரம், சகோதரி, போராளிகள்

(6849)

## 31-ம் நாள் கண்ணீர் அஞ்சலி



### சிவலிங்கம் துரைராசா

(Retired Director of Customs)

மலர்வு 11-09-1932
உதிர்வு 12-11-1993

அன்பின் பிறப்பிடமாகவும் பண்பின் உறைவிடமாகவும் விளங்கிய எங்கள் குலவிளக்கான சிவபதமடைந்த சிவலிங்கம் - துரைராசா அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகளில் நேரடியாக கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கு எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம் இன்று 12 12-93 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், பகல் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மங்களாஸ்ரோஸ் பண்டத்தரிப்பு (6841)

தாயார் மனைவி, சகோதரர்கள், பிள்ளைகள்,

## சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம் சாவகச்சேரி

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம் அவர்கள் அறிவுறுத்தலின் பிரகாரம் 1967 / 1968 காலபோக நெற்செய்கை விவசாயக் கடன் தொடக்கம் 1978 சிறுபோக நெற்செய்கை கடன்வரை சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கத்தில் பெற்ற கடனாளிகள் மீதியாகவுள்ளகடன்தொகையை 31-03-94க்கு முன் முழுதாகச் செலுத்தினால் எவ்வித வட்டியும் அறவிடப்பட மாட்டாது. ஆகவே கடன் மீதியாக செலுத்த வேண்டியவர்கள் சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கத்துடன் தொடர்புகொண்டு 31-03-94க்கு முன் கடனை மட்டும் செலுத்தவும். செலுத்தும் பட்சத்தில் வருங்காலத்தில் வழங்கப்படும் விவசாயக் கடன்களைப் பெற உரித்துடையவர்களாகிறீர்கள் என்பதை சங்க பொதுமுகாமையாளர் அறியத் தருகின்றார்.

பொதுமுகாமையாளர்
(சி-8107) சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்

## 31-ம்நாள் நினைவலைகள்



தாயின் மடியில் 5.4.1977
ஆண்டவன் அடியில் 12 11.1993

### லெப். இளமுருகன் (தீபன்)

(தேவதாஸ் ஜெயதாஸ் குமார்)

திதி : 12-12-1993 ஞாயிறு (இன்று)

எங்கள் அன்புச் செல்வமே குமாரா
எங்கள் வீரச்செல்வனே - இளமுருகா
அம்மா அப்பாவைக் காணவந்தாய்
அருகில் வந்து கொடுத்தாய் ஓர்முத்தம்
அன்பாகப் பழகினாய் சகோதரர்களிடம்
மருமக்களிடம் நன்றாகப் பேசினாய்
அப்போது தெரியவில்லை கடைசிதான் என்று
மருமக்கள் மூவரும் உன் வரவு
எப்போ என்று ஏங்குதடா
பூநகரிக் கடலிலே வீரப்போர் புரிந்தாய்
வெற்றியும் ஈட்டினாய்

இவரின் ஆன்ம சாந்திக்காக பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் 12-12-93 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இரங்கல் பலி ஒப்புக் கொடுக்கப்படும். இதில் அனைவரையும் பங்குபற்றும்படி அழைக்கின்றோம்.

32/3 2-ம் குறுக்குத்தெரு, பாஷையூர், யாழ்ப்பாணம். (6856)

இவரின் பிரிவால் துயருறும் அப்பா, அம்மா, சகோதரர், மைத்துனன், மருமக்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள்

# வெற்றி வெற்றி என்று முழங்குவோம்

## நினைவு கூருகின்றோம்...

1993-12-12

1994 கல்வியாண்டிற்கான புதிய வகுப்புக்கள 14-12-93 செவ்வாய் பி. ப. 3-00 மணிக்கு ஆரம்பமாகும். ஆசிரியர் அம்பிகைபாகன், மாதாந்தப் பயிற்சிப் பரீட்சைகள் நடைபெறும். புதிய கல்வி நிலையம் 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம், (6843)

---

படை வெல்ல அணியான காஞ்சனா பைந்தமிழின் மாமலர்கள் சாற்றுகின்றோம்.

பெரியநீலாசனை, உயிலங்குளம், மன்னார்.

தாய், சகோதரம், சகோதரி, போராளிகள்

(6849)

---

அந்தியேட்டிக் கிரியைகளிலும், பகல் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மங்களாஸ்ரோஸ் பண்டத்தரிப்பு (6841)

தாயார் மனைவி, சகோதரர்கள், பிள்ளைகள்,

---

எங்கள் அன்புச் செல்வமே குமாரா
எங்கள் வீரச்செல்வனே - இளமு நகா
அம்மா அப்பாவைக் காணவந்தாய்
அருகில் வந்து கொடுத்தாய் ஓர்முத்தம்
அன்பாகப் பழகினாய் சகோதரர்களிடம்
மருமக்களிடம் நன்றாகப் பேசினாய்
அப்போது தெரியவில்லை கடைசிதான் என்று
மருமக்கள் மூவரும் உன் வரவு
எப்போ என்று ஏங்குதடா
பூநகரிக் கடலிலே வீரப்போர் புரிந்தாய்
வெற்றியும் ஈட்டினாய்

இவரின் ஆன்ம சாந்திக்காக பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் 12-12-93 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இரங்கல் பலி ஒப்புக் கொடுக்கப்படும். இதில் அனைவரையும் பங்குபற்றும்படி அழைக்கின்றோம்.

32/3 2-ம் குறுக்குத்தெரு, பாஷையூர், யாழ்ப்பாணம்.

இவரின் பிரிவால் துயருறும் அப்பா, அம்மா, சகோதரர், மைத்துனன், மருமக்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள்

(6856)

---


# வெற்றி வெற்றி என்று முழங்குவோம்

## பூநகரி - நாகதேவன்துறை தகர்ப்பு

## [நடவடிக்கை தவளை]

வெற்றி வெற்றியென்று பாடுவோம் வாரீர்
வேங்கை வென்றதென்று ஆடுவோம் வாரீர்

இந்தத் தளங்களைப் புலிப்படை வென்றது
ஆயிரம் பகைவரைப் போரிலே கொன்றது

விடுதலைப் புலிகள் மனம் தளராது
விடிகின்ற வரையில் மண் உலராது

பகைவன் இழந்த ஆயுதம் இங்கே
பற்றிக் கொள்ளும் கரங்கள் எங்கே?

ஆயுதங்கள் தானாகப் போர் புரியாது
ஆட்பலம் சேராமல் நாடமையாது.

இந்த வெற்றியின் பெறுமதியைப் புரிந்து கொள்வோம். அதைப் போற்றிப் புகழ்ந்திட எல்லோரும் எழுந்து வாருங்கள். நாளை நடக்கும் வெற்றி விழாவில் எல்லோரும் சேர்ந்து கொண்டாடுவோம். எல்லோரும் ஒன்று சேருவோம். எல்லோரும் ஒன்றுசேர்ந்தால் நமக்கு வெற்றிகிடைக்கும். வாழ்த்துகின்றோம் வெற்றி! வெற்றி! வெற்றி!

| பி(f)ராங்ளம்போறியம் | பானு பாதணி நிலையம் | யாழ்றேட் சென்ரர் | அகிலன் பாதணி நிலையம் |
|---|---|---|---|
| 16, 38, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | 56, கஸ்தூரியார் றோட் யாழ்ப்பாணம். | 11, நவீனசந்தை யாழ்ப்பாணம். | 121/1, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். |

(6858)


---

## நினைவு கூருகின்றோம்..-.

**1993-12-12**

1987ஆம்ஆண்டு இதேதினத்தில் மட்டு-தளவாய்க் கடற்கரையில் இந்தியப் படையினரால் கைதாகி கொலை செய்யப்பட்டு எமைப்பிரிந்த,

**உதயன்** (நாராயணன் உதயச்சந்திரன் பொத்துவில் மட்டு)

யாழ்ப்பாணத்தில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**முகமட்** (தங்கராசா பரமேஸ்வரன் - வல்வெட்டித் துறை-யாழ்)

பேருந்தில் வவுனியா செல்லுகையில் இந்தியப் படை கைதுசெய்தபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**விமலன்|தம்தோம்** (இராசரத்தினம் விமலசிவம் சுதுமலை, மானிப்பாய்-யாழ்

1988ஆம் ஆண்டு குமுழமுனை நந்தபுரத்தில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய-

**யோகன்** (மாசிலாமணி யோகேஸ்வரன் - குமுழமுனை - மணலாறு)

தமிழீழக் கடற்பரப்பில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட படகுவிபத்தில் எமைப்பிரிந்த-

**லெப். சிவகரன்** (செல்லத்துரை ஜெரால்ட் ஜெயந்திரன் புனித ஆசீர்வாதப்பர் வீதி, யாழ்)

திருமலையில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட 09 தமிழர்கள்.

யாழ்-மயிலிட்டிப் பகுதியில் தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 பொதுமக்கள்.

1992ஆம் ஆண்டு மணலாறு - முந்திரிகைக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவ முகாம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போதுவீரச்சாவெய்திய-

**லெப். மணியம்-சுகுமார்** (கந்தசாமி செல்வராசா - சந்திவெளி - மட்டு)

**லெப். மறைக்கோன்-சிறிகரன்** (முத்துவேல் விஜயகுமார் - வாழைச்சேனை - மட்டு)

**லெப்.முத்தழகு-டியூட்டோன்** (காசிப்பிள்ளை சசிகுமார் - களுவாஞ்சிக்குடி - மட்டு)

**லெப். வரதன்-மைக்கல்** (முத்துராசா குமாரசிங்கம் - வட்டக்கண்டல் - மன்னார்)

**2-ம் லெப். கலைவாணி** (மதிவதனி செல்வராசா - மீசாலை தெற்கு - சாவகச்சேரி

**மரியாள்** (வரலட்சுமி விநாயகமூர்த்தி - பண்டத்தரிப்பு-யாழ்)


ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-8102)

நல்லூர் இசை நூலகம்
யாழ்ப்பாணம்

## 31ஆம் நாள் நினைவலைகள்



**மேஜர் பூவழகு (விக்கி)**
**(சண்முகநாதன் விக்னேஸ்வரன்)**

தாயின் மடியில்: 14-02-1965
தமிழீழ மண்ணில்: 12-11-1993

திக்கெல்லாம் புலிகள் வீரம்
தெரிந்திட, ஒளியாய் நின்றோன்
அற்புதம் படைக்க நல்ல
ஆயுதம் அளித்த வேங்கை
தக்கதோர் வீரன், என்றும்
தமிழின விடிவை நோக்கி
''விக்கி'' யென் றெழுந்தான், நேற்று
விழுந்தொரு சரிதம் ஆனான்.

நெஞ்சினில் நெருப்பு ஏந்தி
நின்றவா! ''விக்கி'' என்று
வெஞ்சமர் களங்கள் கண்டு
வென்றவா! தலைவன் மீது
அன்பினைச் சொரிந்து எம்மை
அணைத்தவா! உன்னைச் சாவு
வென்றதா? இல்லை எங்கள்
விழிகளில் என்றும் வாழ்வாய்

உனது உயிர் தோழர்கள்

(6817)

## தடுப்புக்காவலில் இருந்து 222பேர் பரீட்சை எழுதினர்

(கொழும்பு)

தடுப்புக்காவலில் வைக்கப் பட்டுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 222 தமிழ் மாணவர்கள் க. பொ. த. (சா|த) பரீட்சை எழுதஅனுமதிக்ப்பட்டதாக தெரிய வருகிறது.

வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள 182 பேரும், பூசா தடுப்பு முகாமிலுள்ள 40 பேரும் பரீட்சை எழுதுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது. எனினும் இறுதி நேரத்தில் பாதுகாப்புக் கருதி தடுத்து வைக்கப்பட்டவர்கள் பல்வேறு முகாம்களுக்கும் மாற்றப்பட்டதைத் தொடர்ந்து அந்தந்த முகாமிலேயே பரீட்சை எழுதஏற்பாடு செய்யப்பட்டதாகவும் தெரிய வருகிறது

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**2-ம் லெப். மணிமாறன்**
**(தம்பிராசா இரகுலதரன்)**
(கருகம்பனை கீரிமலை.)

தாயின் மடியில் 1973. 12. 09
பூநகரி மண்ணில் 1993. 11. 12

அன்னை தந்தை சோதரரைப் பிரிந்தாய்
புலிகளின் அணியிலே இணைந்தாய்
மண்ணதே உயிராய் மானமே பெரிதாய்
மறத்தமிழ் வீரனாய் எழுந்தாய்
தன்னிகரில்லாப் பூநகரியிலே
சாதனை படைத்திடப் புகுந்தாய்
உன்னையே கொடுத்தாய் தாயகம், விடிய
எம்துயர் எப்படிப் பொறுப்போம்?

தவளை நடவடிக்கையில் இவருடன் வீரச்சாவை தழுவிய ஏனைய மாவீரர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்

உன்பிரிவால் தவிக்கும்
அம்மா, அப்பா, சகோதரர்,
சகோதரி மற்றும் உறவினர்கள்.

உரும்பராய் மேற்கு,
உரும்பராய்

(6850)

## பூநகரியில் உயிரிழந்த படையினர் பெயர் விபரம் வெளியிட வேண்டும்

### மகிந்த ராஜபக்ஸ கோரிக்கை

(கொழும்பு)

பூநகரி கூட்டுப்படைத்தளத்தின் மீதான தாக்குதலின் போது உயிரிழந்த மற்றும் காணாமற்போன பாதுகாப்பு படையினரின் பெயர் விபரங்களை அரசாங்கம் வெளியிட வேண்டும். இவ்வாறு அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான பாராளுமன்ற கமிட்டியின் தலைவரும், அம்பாந்தோட்டை மாவட்டபாராளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஸ பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிய கடிதமொன்றில் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்துடன் சிறிலங்கா முழுவதிலுமுள்ள சுமார் எண்ணூறுக்கும் மேற்பட்ட படையினர் இத்தாக்குதலில் பலியானதாகவும், இதைவிட இன்னும் பல நூற்றுக்கணக்கானோர் காணாமற் போயிருப்பதாகவும் பாதுகாப்பு துறையின் உயர் அதிகாரி ஒருவர் தம்மிடம் தெரிவித்திருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். எனவே உண்மையான நிலை வெளிக்கொணர வேண்டும் என்பதே இன்று முக்கியமானது எனவும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்

இப் படைத்தளத்தில் இருந்த பாதுகாப்பு படையினரின் பெற்றோர் இந் நிகழ்வு தொடர்பாக இதுவரை கவலையில் வாழ்வதாகவும்குறிப்பிட்டு எனவே பாதுகாப்பு அமைச்சு, இதில் இறந்தவர்கள் காணாமல் போனவர்கள் காயமடைந்தவர்கள் தொடர்பாக பெயர்ப் பட்டியல் ஒன்றை வெளியிட வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

### ஒளி விழா

யா - தொழில் நுட்பக் கல்லூரி கிறிஸ்தவ மாணவர் ஒன்றியத்தினால் இன்று ஞாயிற்றுக்கிழமை ''ஒளி விழா'' நடாத்தப்படவுள்ளது. இவ் ஒளிவிழாவில் பல கலைநிகழ்வுகளும் இடம்பெற உள்ளன. (09)

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு
18-03-1923

உதிர்வு
12-12-1992



அமரர்
**திரு. டானியல் வேதநாயகம்**

(ஓய்வுபெற்ற இறக்குமதி ஏற்றுமதி திணைக்கள பிரதம கட்டுப்பாட்டாளர்)

''வாழ்வில் எம்மை நேசித்தவரை
இறப்பிலும் நாம் மறவோம்''

ஆண்டொன்று சென்றாலும்
அன்பு முகம் மறக்கமுடியவில்லை
அழியா நினைவலைகள்
ஆட்டிப்படைக்கிறதே
அன்போடு எம்மை அரவணைத்த பப்பா
இனி என்று உம் முகம் காண்போம்?
பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் திருவுருவாய்
வாழ்க்கையில் எமக்கு கலங்கரை விளக்காக
வழிகாட்டிய அன்பு தெய்வமே
நீங்கள் இம் மண்ணகம் விட்டு
விண்ணகம் சென்றாலும்
எங்கள் நெஞ்சங்களில் இன்றும்
வாழ்ந்து கொண்டே இருக்கிறீர்கள் -- பப்பா
பார்தனிலே எம் வாழ்விற்காய்
உங்களை உரமாக்கினீர்கள்
எம் உயர்வு காணும் முன்னே
இறைவன் தாழ் சென்றடைந்ததேனோ? பப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
நாங்கள் என்றும் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமகன்

இல:-11
கென்ஸ்மன் லேன்
சாவகச்சேரி.

(6338)

# ஒப்ரேசன் தவளை

பூநகரி கூட்டுப்படை தளத் தகர்ப்பின்

விழுந்தொரு சரிதம் ஆனான்.

நெஞ்சினில் நெருப்பு ஏந்தி
நின்றவா! ''விக்கி'' என்று
வெஞ்சமர் களங்கள் கண்டு
வென்றவா! தலைவன் மீது
அன்பினைச் சொரிந்து எம்மை
அணைத்தவா! உன்னைச் சாவு
வென்றதா? இல்லை எங்கள்
விழிகளில் என்றும் வாழ்வாய்

உனது உயிர் தோழர்கள்

(6817)

மண்ணதே உயிராய் மானமே பெரிதாய்
மறத்தமிழ் வீரனாய் எழுந்தாய்
தன்னிகரில்லாப் பூநகரியிலே
சாதனை படைத்திடப் புகுந்தாய்
உன்னையே கொடுத்தாய் தாயகம், விடிய
எம்துயர் எப்படிப் பொறுப்போம்?

தவளை நடவடிக்கையில் இவருடன் வீரச்சாவை தழுவிய ஏனைய மாவீரர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்

உன்பிரிவால் தவிக்கும்
அம்மா, அப்பா, சகோதரர்,
சகோதரி மற்றும் உறவினர்கள்.

உரும்பராய் மேற்கு,
உரும்பராய்

(6850)

அமைச்சு, இதில் இறந்தவர்

### ஒளி விழா

யா - தொழில் நுட்பக் கல்லூரி கிறிஸ்தவ மாணவர் ஒன்றியத்தினால் இன்று ஞாயிற்றுக்கிழமை ''ஒளி விழா'' நடாத்தப்படவுள்ளது. இவ் ஒளிவிழாவில் பல கலைநிகழ்வுகளும் இடம்பெற உள்ளன. (09)

எங்கள் நெஞ்சங்களில் இன்றும்
வாழ்ந்து கொண்டே இருக்கிறீர்கள் -- பப்பா
பார்தனிலே எம் வாழ்விற்காய்
உங்களை உரமாக்கினீர்கள்
எம் உயர்வு காணும் முன்னே
இறைவன் தாழ் சென்றடைந்ததேனோ? பப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
நாங்கள் என்றும் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமகன்

இல:-11
கென்ஸ்மன் லேன்
சாவகச்சேரி.

(6838)

# ஒப்ரேசன் தவளை

## பூநகரி கூட்டுப்படை தளத் தகர்ப்பின்

# வெற்றிநாள்

## 11, 12, 13

புலிப்படை சினம் கொண்டு எழுந்தது
பெரும் தளம் பூநகரி விழுந்தது - இனி
விழும் விழும் எதிரியின் பாசறை
தமிழ் உயிர்த் தலைவன் மூச்சால்
எழும் எழும் எம் இனம்
புலிப்படை வீரரின் வீச்சால்
வரும் வரும் ஈழ மண் - ஆயுதம்
ஏந்தி நீ களத்தினில் புகுந்தால்

இன்று
பூநகரி வெற்றி நாள்
தமிழரின் எழுச்சி நாள்
தீரமுடன் கொண்டாடுவோம்

**வடமாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கம்**

(தனியார் நிறைவேற்றுப் பணியகம்)

(சி-8103)

31-ம் நாள் 5-ம்மாத 42-ம் நாள்

## நினைவகலா நினைவஞ்சலி





**லெப். மாமுலன் (லெனின்)**
(ஜெயபாலசிங்கம் தங்கநாயகம்)
தாயின் மடியில் 29 09 1973 வீரச்சாவு 12-11-1993

**ஆனந்தி**
(ஜெயபாலசிங்கம் சத்தியகாந்தி)
தாயின் மடியில் 05-10-1977 தாயக மண்ணில் 18-07 1993

**குமார்**
(ஜெயபாலசிங்கம் சசிகுமார்)
தாயின் மடியில் 10-10-1975 தமிழீழ மண்ணில் 01-11-1993

தாயக மண்ணின் விடிவை எண்ணியும்
எங்கள் அனைவரின் நினைவுடனும் எமை
விட்டுப் பிரிந்த எங்கள் அன்புச் செல்வங்களே
அன்பு மும் முத்துக்களையும் பிரிந்து
நாட்கள் மாதங்களாகியும் - உங்கள் நினைவுகள்
எங்கள் மனதை விட்டு நீங்கா...

கடலில் அலை மோதுவது போல, நீங்கள் எங்கள் கண்களில் மோதிக் கொண்டிருக்கின்றீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் கண்ணீர் எனும் பூக் கொண்டு பிரார்த்திக்கின்றோம்.

திருகோணமலை,
குச்சவெளி.

தற்போதைய முகவரி;
சோலைத் தோட்டம்,
புலோப்பளை, பளை,

இவர்களைப் பிரிந்து துயருறும்
**அம்மா, அப்பா, அக்கா,**
**தங்கை, தம்பி, அத்தான், மருமக்கள்**

(6840)

### கூட்டுறவு வருடமாகப் பிரகடனம்

(கொழும்பு)

1994 - ம் ஆண்டை கூட்டுறவு வருடமாக உணவு கூட்டுறவு துறை அமைச்சு பிரகடனம் செய்துள்ளது.

இதனை இட்டு கூட்டுறவு ஊழியர்களுக்கான பலஊக்குவிப்பு திட்டங்களை அமைச்சு நாடு முழுவதும் நடைமுறைப் படுத்தவுள்ளது. அதிகளவு இலாபத்தைச் சம்பாதிக்கும் கூட்டுறவு சங்கங்களில் தொழில் புரியும் ஊழியர்களுக்கு மேலதிகமாக 30 வீத கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. இதேவேளை கூட்டுறவு சங்கங்களில் கடமையாற்றும் பெண் ஊழியர்களுக்கு 84 நாட்கள் பிரசவ விடுமுறை வழங்கப்படவுள்ளது. சாதாரண விடுமுறைகள் இதில்சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது எனவும் தெரியவருகிறது.

### மீளாய்வு முடிவு திகதி நீடிப்பு

(நமது நிருபர்)

1993ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம்நடைபெற்றக.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் மீளாய்வு செய்வதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி தைமாதம் 7ஆம் திகதி என பரீட்சைத்திணைக்களம் அறிவித்துள்ளது

மீளாய்வு செய்வதற்கு பாடம் ஒன்றிற்கான கட்டணம் ரூபா 100 ஆகும். ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வொரு விண்ணப்பப் படிவம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். இவ் விண்ணப்பப் படிவங்களில் முக்கியமாக பரீட்சைச் சுட்டெண், பரீட்சை நிலைய, எண். பரீட்சை நிலையத்தின் பெயர் போன்றவை குறிப்பிடப்படுதல் வேண்டும்.

பாடசாலைப் பரீட்சார்த்திகள் பாடசாலை ஊடாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்திற்கு பரீட்சை ஆணையாளர், மதிப்பீட்டுக்கிளை, இலங்கைப்பரீட்சைத்திணைக்களம், மலேவீதி கொழும்பு-2 என்ற முகவரிக்கு நேரடியாக அனுப்பி வைக்க வேண்டும். (பா)


## அறிவித்தல்

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கொடிகாமம் தனது 1994ஆம் ஆண்டிற்கான பொதிகள் ஏற்றுவதற்கான லொறிச்சேவை ரெண்டர் மூலம் கோரப்படுகின்றது. விண்ணப்பப் பத்திரம் பிரதம சங்கத்தில் பெற்று பூர்த்தி செய்து 27-12-93-ம் திகதிக்கு முன்பு பொது முகாமையாளரிடம் சேரல் வேண்டும். கேள்விப் பத்திரம் பெறுவதற்கு ரூபா 150/- செலுத்த வேண்டும். இப்பணம் மீள் அளிக்கப்பட மாட்டாது. தெரிவு செய்யப்படுபவர் பிணை ரூபா 2500/- செலுத்தி சங்கத்துடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

**பொது முகாமையாளர்,**
தென்மராட்சி கிழக்கு ப. நோ கூ. சங்கம்,
(10-12-93) கொடிகாமம்.

(சி-8106)


## 31-ம் நாள் நினைவஞ்சலி



**கப்டன் திலகர்**
**(இராமநாதன் வித்தியானந்தன்)**

தாயின் மடியில்: 7.10.1972 தாயக மண்ணில்: 12.11.1993

விடுதலை வேள்வியில் அரும்பாகி
மொட்டாகி மலரும் முன்னே
உதிர்ந்த எம் வித்தியே - உனது
மரணம் கதையல்ல அது ஒரு வீரகாவிய வரலாறு.

அன்றைய தினம் இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட அனைத்து மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள்.

A-Z, ஓட்டோ வேக்ஸ்,
கண்டி வீதி, அரியாலை. (6852)
- மாமா குடும்பத்தினர்

தமிழிற்காய் புலியாகி
தமிழ் மண்ணுக்கே வித்தாகி
மாவீரப் புகழேந்தி
எம் நெஞ்சங்களில் நிறைந்திட்ட

## குணாவை

கடலில் அலை மோதுவது போல, நீங்கள் எங்கள் கண்களில் மோதிக் கொண்டிருக்கின்றீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் கண்ணீர் எனும் பூக் கொண்டு பிரார்த்திக்கின்றோம்.

திருகோணமலை,
குச்சவெளி.

இவர்களைப் பிரிந்து துயருறும்

தற்போதைய முகவரி;
சோலைத் தோட்டம்,
புலோப்பளை, பளை,

அம்மா, அப்பா, அக்கா,
தங்கை, தம்பி, அத்தான், மருமக்கள்

(6840)

வேண்டும்.

பாடசாலைப் பரீட்சார்த்திகள் பாடசாலை ஊடாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் இலங்கைப்பரீட்சைத்திணைக் களத்திற்கு பரீட்சை ஆணையாளர், மதிப்பீட்டுக்கிளை, இலங்கைப்பரீட்சைத்திணைக் களம், மலேவீதி கொழும்பு-2 என்ற முகவரிக்கு நேரடியாக அனுப்பி வைக்க வேண்டும். (பா)

7.10.1972 | 12.11.1993

விடுதலை வேள்வியில் அரும்பாகி
மொட்டாகி மலரும் முன்னே
உதிர்ந்த எம் வித்தியே - உனது
மரணம் கதையல்ல அது ஒரு வீரகாவிய வரலாறு.

அன்றைய தினம் இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட அனைத்து மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள்.

A-Z, ஓட்டோ வேக்ஸ், - மாமா குடும்பத்தினர்
கண்டி வீதி, அரியாலை. (6852)

தமிழிற்காய் புலியாகி
தமிழ் மண்ணுக்கே வித்தாகி
மாவீரப் புகழேந்தி
எம் நெஞ்சங்களில் நிறைந்திட்ட **குணாவை**

# பூநகரி வெற்றி நாளில் நினைவு கூருகின்றோம்!



தென்மராட்சிக் கோட்ட சிறப்புப் பொறுப்பாளர்

# லெப். கேணல் குணா

**(சுந்தரம் விஜயராசா)** கல்வயல்

அன்னை மடியில்:
1963. 11. 28

களத்தில்:
1993. 11. 11

புனல் முழங்கிடும் புவிதென் மராட்சியில்
புயல் பிறந்தது போல் பிறந்தவன்
அனல் புகுந்தது போல் எதிரியின்
தளம் பொசுக்கி வைத்தான்
விதை விழுந்தது போல் மண்ணிலே
குணா விழுந்துமா வீரனாகினான்
கதை முடிந்திடவில்லை இல்லையே
களம் முழுதும் அவன் கதை தொடருதே

***11. 11. 93*** அன்று பூநகரி இராணுவ முகாம் தகர்ப்பில் (ஒப்ரேசன் தவளை) வீரகாவியம் படைத்து தங்களை ஆகுதி ஆக்கிய மாவீரர்களுக்கும் எமது நினைவஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

(சி-8104)

**வர்த்தக சங்கம் கொடிகாமம்**

நல்லூர் கோ. நூலகம்
யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

தங்களை முற்றிலும் தியாகம் செய்வோர் புகழ்ந்து போற்றப்படுகின்றனர். மனிதர் காண விழைவது தியாக குணத்தையே மற்றவர்களிடம்
-ரேஹெல்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 12-12-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
த. பெ எண் - 05

## ‘பெருமை கொள்வோம்’

பூநகரிப் படைத்தளம் தகர்ப்பின் மூலம் விடுதலைப் புலிகள் ஈட்டிய சாதனைகளைப் போற்றும் வகையில் நேற்றும், இன்றும், நாளையும் ‘வெற்றிவிழா’ எடுக்கப்படுகின்றது. பூநகரியில் விடுதலைப் புலிகள் ஈட்டிய ‘வரலாற்றுப் புகழ் மிக்க வெற்றி’ குறித்து விழா எடுப்பதில் தவறு ஏதுமில்லை. அத்தோடு, இவ் ‘வெற்றி விழா’ தனியாக விடுதலைப் புலிகளின் சாதனையை மட்டுமல்ல, இத்தாக்குதலில் வீரச்சாவடைந்த போராளிகளின் தியாகத்தைப் போற்றும் விழாவாகவும் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பது முற்றிலும் பொருத்தப்பாடானதே ஆகும்.

பூநகரிப் படைத்தளத்தில் விடுதலைப் புலிகள் ஈட்டிய பெரும் சாதனையானது, பதினைந்து வருடகால விடுதலைப் புலிகளின் இராணுவ வரலாற்றில் மகத்தானது என்பதில் கேள்விக்கே இடமில்லை. மறுவளமாக சிறிலங்கா இராணுவத்தைப் பொறுத்து பெரும் சோதனையாகவும், வேதனையாகவும் அமைந்ததென்பதிலும் தவறில்லை. இதனை சிறிலங்கா இராணுவத் தரப்பு உட்பட, இராணுவ விமர்சகர்கள் பலரும் வெளிப்படையாகவே ஒப்புக் கொண்டும் உள்ளனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில், இம்முகாம் தகர்ப்பு பெரும் வரலாற்றுச் சாதனை என்பதற்குக் கொல்லப்பட்ட எதிரியின் எண்ணிக்கை, கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் தொகை என்பன உயர்வாக உள்ளமை மட்டும் காரணமல்ல. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் எதிரியின் முதலாம் தர படைத்தளம் ஒன்று தகர்க்கப்பட்டது என்பது முக்கியமானது. அதாவது, இரண்டு பட்டாலியன் படைப்பிரிவையும், அத்துடன் இணைந்த பீரங்கிப் படைப்பிரிவையும் கொண்டிருந்ததோடு நவீன வசதிகளுடன் கூடிய கடற்படை முகாமையும் கொண்டிருந்த கூட்டுப்படைத் தளம் ஒன்று நிர்மூலமாக்கப்பட்டது என்பதே முதன்மையானதாகும்.

அத்தோடு, இத்தாக்குதல் யுத்தத்தைப் புதியதொரு பரிணாமத்திற்கும் இட்டுச் சென்றது. இதில் போர் யுக்திகள், படைநகர்த்தல்கள், ஆயுதங்களின் பிரயோகம் எனப்பல அம்சங்கள் புதியவடிவம்பெற்றன. இறுதியில் பூநகரிப் படைத்தளத்தில் இராணுவத் தரப்பு பறிகொடுத்த ஆயுதங்களானது, யுத்தத்தை இன்னுமொரு கட்டத்திற்கும் நகர்த்தியுள்ளதெனலாம்.

# வடக்கை விட பயங்கர சூழல் மலையகத்தில் உருவாகலாம்

-காமினி திசாநாயக்க

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்கள் இன்று விரக்தியின் விளிம்புக்கே சென்று விட்டனர். தொண்டமான் அல்ல எவர் சொன்னாலும் விரக்தி மேல் ஓங்கி வடக்கைப் பார்க்கிலும் பயங்கர சூழ்நிலை மலையகத்தில் உருவாகும் ஆபத்து உள்ளது. இவ்வாறு முன்னாள் அமைச்சரும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவருமான காமினி திசாநாயக்க தெரிவித்தார்.

மத்திய மாகாண சபையின் 1994ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், தொண்டமானுடன் சேருகின்ற கட்சிகள் சுடுகாட்டுக்குத்தான் போக வேண்டும் என்று தேசியப் பத்திரிகைகளில் எழுதப்படுகிறது தேசிய பத்திரிகைகள் எனக் கூறிக்கொண்டு இவை இனவாதத்தைதூண்டி பிளவுபடுத்த முனைகின்றன என்றும் குற்றம் சாட்டினார். அரசியலில் இருந்து ஓரங்கட்டப்பட்டவர்களும், மக்களை எவ்வகையிலும் பிரதிநிதித்துவப் படுத்தாதவர்களுமே தொண்டமானைத் தூற்றுகின்றனர்.

தோட்டத் தொழிற்துறையைப் பொறுத்த வரையில், தொண்டமானுடன் பேசாமல் வேறு யாருடன்தான் பேச முடியும். பலமுறை சிந்தித்து நாட்டுக்கும், சமூகத்துக்கும் சரியெனப் பட்டதையே தொண்டமான் தீர்மானிப்பார். நன்றாகச் சிந்தித்த பின் ஏதாவது ஒன்று சரியென்று தீர்மானித்தால் அத்தீர்மானத்தை அவர் மாற்றமாட்டார். அவரது சொற்கள் கல்லின் மேல் எழுதிய எழுத்தைப் போன்றது என்றார்.

வடக்கு கிழக்கு நிலைபற்றி

## உலகவங்கிபிரதிநிதிகள்குழு திருமதி சிறிமாவுடன் பேச்சு

(கொழும்பு)

உலக வங்கியின் தென்னாசியப் பிரதிநிதிகள் குழு எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் வடக்கு, கிழக்கு பிரச்சினை தொடர்பாக விரிவான பேச்சுவார்த்தையொன்றை அண்மையில் நடத்தியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவியின் றோஸ்மீட் பிளேசிலுள்ள அவரது வீட்டில் இந்தச் சந்திப்புநடைபெற்றது இந்தச் சந்திப்பின் போது திருமதி சிறிமாவோவுடன் சுதந்திரக் கட்சியின் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா, கிங்ஸ்லி விக்கிரமரத்னா உட்பட மற்றும் பல பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்ததாகவும்தெரிய வருகின்றது.

இந்தப் பேச்சுவார்த்தைகள் நீண்ட நேரம் நீடித்தது என்றும், வடக்கு, கிழக்கு யுத்தத்தின் நிலை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

## படையினருக்கு20லொறியில் அத்தியாவசியப் பொருள்

### நேற்று முன்தினம் முதல் விசேட திட்டம்

(கொழும்பு)

வடக்கிலும், கிழக்கிலும் இருக்கும் பாதுகாப்பு படையினரின்முகாம்களுக்கு அத்தியாவசிய பொருள்களை அனுப்பி வைக்கும் விசேட திட்டம் நேற்றுமுன்தினம் முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. வைத்திய உபகரணங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களைஏற்றிய இருபது லொறிகள் இதற்காக கொழும்பிலிருந்துஅநுராதபுரம் நோக்கி நேற்று முன்தினம் காலை புறப்பட்டன. உணவு கூட்டுறவுத் துறை அமைச்சின், கீழுள்ள நிறுவனங்களும், கொடை வள்ளல்களும் வழங்கிய நிதியுதவியின் மூலம் திரட்டப்பட்ட இப் பொருள்களின் பெறுமதி 25 லட்சம் ரூபா எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உணவுத் திணைக்களத்தின் களஞ்சியசாலைக்கு அருகே நடந்த வைபவத்தில் உணவுத்துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமராச்சி இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ணாவிடம் இவற்றைக் கையளித்தார்.

## கொள்ளை தொடர்பாக அரசியல்வாதி தேடப்படுகிறார்

(கொழும்பு)

பல இலட்சம் ரூபா பெறுமதியான இரத்தினக் கற்கள் மற்றும் தங்க ஆபரணங்கள் ஆகியன கொள்ளையடிக்கப்பட்டதற்குப் பொறுப்பான கோஷ்டியொன்றின் தலைவரெனச்சந்தேகிக்கப்படும் பொலநறுவையைப்பகுதியைச் [illegible] இப்பொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன

இக்கொள்ளை தொடர்பாகச் சந்தேகிக்கப்படும் அரசியல்வாதி தலைமறைவாகியுள்ளார் என்று சி. ஐ. டி. வட்டாரங்கள் கூறியுள்ளன.

ஆறு பேர் பங்கு கொண்ட இக்கொள்ளைக் கும்பலுக்கு [illegible]

## தொண்டமானின் பின்னே வாக்குகளுக்காக செல்லாதீர்

- தேரோ வேண்டுகோள்

(கொழும்பு)

மலையக தோட்டத்தொழிலாளரின் வாக்குகளைப் பெறுவதற்காக அமைச்சர் தொண்டமானுக்குப் பின்னே செல்ல வேண்டாம். இவ்வாறு சென்று தொண்டமானின் வலைகுள் விழுவது சிங்களக் கட்சிகளுக்கு நல்ல சகுனமாக ஒருபோதும் இருக்காது. இவ்வாறு அமரபுர மகா சங்கரத்த மரகோ பஞ்சசீக மகா தேரோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், வாக்குகளை வைத்துக் கொண்டு தொண்டமான் நடத்தும் ஏல விற்பனையில் சிக்காமல்சிங்களக் கட்சிகள் மலையகத்தவரை மீண்டும் இந்தியாவிற்கு அனுப்பும் முயற்சியில் அக்கறை காட்ட வேண்டும்.

இன்றையநிலைதொடர்ந்து நீடிக்குமானால் மலைநாட்டில் பௌத்தமதம் நாளைக்கு வடக்கு - கிழக்குப் பகுதியிலுள்ள இன்றைய நிலைக்கு தள்ளப்பட்டு விடும். எனவே மிகுந்த அவதானமாகபௌத்தத்தையும், சிங்களத்தையும் காப்பாற்ற சிங்கள கட்சிகள் முன்வரவேண்டும் என்றும் அவர்கேட்டுக் கொண்டார்

## யுத்தத்தால்அழிவே ஏற்படும் அரசு இதை உணர வேண்டும்

- தொண்டமான்

(கொழும்பு)

யுத்தத்தினால் ஏற்படுவது வெறும் அழிவுகள் மட்டுமே வேறு ஒன்றும் அங்கு நடைபெறப்போவதில்லை என்பதை இனியாவது அரசாங்கம் நன்கு உணர வேண்டும் என்று இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான செள தொண்டமான் தெரிவித்துள்ளார்.

லங்காலதீப பத்திரிகைக்கு பேட்டி அளித்த அவரிடம் பூநகரி இராணுவ முகாம் மீதான தாக்குதல் தொடர்பாக கேட்கப்பட்ட போதே இவ்வாறுதெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் இத்தகைய சம்பவங்களைத் தொடர்ந்தும் இராணுவத் தீர்வு என்பதையே அரசாங்கம் கடைப்பிடிக்குமானால் அது அரசாங்கத்தைப் பொறுத்த விடயம் ஆகும் எனவும் குறிப்பிட்டார்.

# காங்கிரசுடன் கூட்டணி அமைக்க தமிழகமுதல்வர் ஜெயலலிதா முயற்சி

### ஏற்றுக்கொள்ள வாழப்பாடி மறுப்பு

(சென்னை)

அ. தி. மு. க மீண்டும் காங்கிரசுடன் கூட்டணி ஏற்படுத்த முயற்சித்து வருகிறது இதன் பொருட்டு முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று முன்தினம் பிரதமர் நரசிம்மராவுடன் பேச்சு நடத்தினார் ஓராண்டுக்கு முன் பாரதிய ஜனதா கட்சியே மத்திய அரசை கைப்பற்றும் என்ற வகையில் இந்திரா காங்கிரசுடனான தனது கூட்டணியை முறித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தற்போது வட மாநில சட்டமன்ற தேர்தலில்காங்கிரஸ் வெற்றிகள் பெற்றதையடுத்து ஜெயலலிதா தம்முடைய பழைய நிலையை மாற்றிக் கொண்டு விட்டதாக தெரிவிக்கப்படுகிறது பேச்சுகளின் போது கூட்டணி குறித்த முடிவை தமிழக காங்கிரஸ் தலைவர்களே தீர்மானிக்க வேண்டும் என பிரதமர் நரசிம்மராவ் கூறியதாகவும் கூட்டணிக்கு தாம் தயாரில்லை என தமிழக காங்கிரஸ் தலைவர்கள் மறுத்து விட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே வேளைதமிழக ஆளுநர் தனது இல்லத்தில் ஒட்டுக் கேட்கும் கருவிகளைதமிழக அரசு பொருத்தியுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சருக்கு புகார் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

## ஒரு

இராணுவம் பெரும்பிரசார திட்டமொன்றை எம்மீது ஏற்படுத்தியுள்ளது அதன் மூலம் எமது தரப்பில் இழப்புக்களை பெரிதுபடுத்தி எங்க [illegible]

## உதை பந்தாட்டம்

சிறிலங்கா அரசின் விமா [illegible]

## இந்த

தலைமுறைக்கான யுத்தம். இது இந்தத் தலைமுறைக்கான யுத்தமே அல்ல. இது அடுத்த தலைமுறைக்கான யுத்தம் உங்கள்பிள்ளைகளுக்கான யுத்தம் பேரப்பிள்ளைகளுக்கான யுத்தம். இந்த வெற்றியைப் பெற்று அனுபவிக்கப் போகின்றவர்கள் உங்களுடைய பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் தான் என்றார்.

இக் கூட்டத்தில் மகளிர் அமைப்பைச் சேர்ந்த சந்திரிகா பேசும் போது, ‘‘இப்பெரும் சமரிலே கலந்து [illegible]

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில், இம்முகாம் தகர்ப்பு பெரும் வரலாற்றுச் சாதனை என்பதற்குக் கொல்லப்பட்ட எதிரியின் எண்ணிக்கை, கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் தொகை என்பன உயர்வாக உள்ளமை மட்டும் காரணமல்ல. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் எதிரியின் முதலாம் தர படைத்தளம் ஒன்று தகர்க்கப்பட்டது என்பது முக்கியமானது. அதாவது, இரண்டு பட்டாலியன் படைப்பிரிவையும், அத்துடன் இணைந்த பீரங்கிப் படைப்பிரிவையும் கொண்டிருந்ததோடு நவீன வசதிகளுடன் கூடிய கடற்படை முகாமையும் கொண்டிருந்த கூட்டுப்படைத் தளம் ஒன்று நிர்மூலமாக்கப்பட்டது மிக முதன்மை யானதாகும்.

அத்தோடு, இத்தாக்குதல் யுத்தத்தைப் புதிய தொரு பரிணாமத்திற்கும் இட்டுச் சென்றது. இதில் போர் யுக்திகள், படைநகர்த்தல்கள், ஆயுதங்களின் பிரயோகம் எனப்பல அம்சங்கள் புதியவடிவம்பெற்றன. இறுதியில் பூநகரிப் படைத்தளத்தில் இராணுவத் தரப்பு பறிகொடுத்த ஆயுதங்களானது, யுத்தத்தை இன்னுமொரு கட்டத்திற்கு நகர்த்தியுள்ளதெனலாம்.

மேலும், இப்படைத்தளம் தகர்ப்பானது ஒரு தளம் நிர்மூலமாக்கப்பட்டதுடன் முடிந்து போன சம்பவமல்ல. அதன் எதிரொலி சிறிலங்கா இராணுவ, அரசியல் மட்டத்திலும் பலமாகவே எதிரொலித்தது. இதன் பிரதிபலிப்பு சிறிலங்கா இராணுவத் தலைமையை தலைகுப்புற வீழ்த்தியது. இராணுவத் தளபதிகள் பலரின் பதவிகள் குறித்து கேள்விகளை எழுப்பியுள்ளது.

இதன்மூலம், தமிழர் தேசியஇன விடுதலைப்போராட்டத்திற்கு எதிரான சிறிலங்கா இராணுவத்தின் மூல தந்திரோபாயமே ஆட்டம் கண்டுள்ளதெனலாம். யாழ்ப்பாணக் குடாநாட்டை முற்றுகையிட்டு, புலிகளின் 'குரல் வளையை நெரிக்கும்' இராணுவத்தின் நோக்கம் தோல்வி கண்டது. அதேவேளை, முற்றுகை முயற்சியில் முக்கிய பங்கு வகித்த கிளாலிக் கடற்பரப்பு - யாழ் கடல் நீரேரி - விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது. இது முற்றுகை முயற்சியை முறியடித்து பெரும் வழி ஒன்றைத் திறந்து விட்டது.

தாக்குதலின் இராணுவ முக்கியத்துவம் இவ்வாறாக இருக்க, அரசியல் ரீதியாக தென்னிலங்கை அரசியலிலும் சிங்கள மக்கள் மத்தியிலும் பெரும் தாக்கத்தையும், அதிர்வையும் ஏற்படுத்தியது. முதலில் சிங்கள அரசியல் மற்றும் பௌத்த பேரினவாதத் தலைவர்களுக்கும், பேரிடியாய் அமைந்தது மேலும் இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியான தீர்வு காணலாம் என நம்பிக்கை கொண்டிருந்த மற்றவர்களுக்கும் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்ததோடு இராணுவ வெற்றி என்பது வெறும் பகற்கனவு என்பதையும் உணர்த்தியது.

அடுத்ததாக, சிறிலங்காவின் ஜனாதிபதியின் இனப்பிரச்சினை அல்ல என்ற கூற்றிற்குக் கொடுக்கப் பட்ட பதிலடியாகவும் இருந்தது. இதேவேளை, உளப்பூர்வமாகவோ அன்றி அரசியல் லாப நோக்கிலோ இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகாது என்பதை எதிர்க்கட்சிகள் சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு செல்லக் கூடிய வேண்டிய ஒரு சூழ்நிலையை உருவாக்கியுள்ளதெனலாம். அதாவது, வெற்றியின் மாயையை சிங்களவருக்குச் சிதைத்த தாக்குதல் இதுவாகும்.

இந்நிலையில், பூநகரிப் படைத்தளம் தகர்ப்பு என்பது தமிழர் வீரத்திற்குக் கிடைத்த வெற்றி என்பதில் சந்தேகமே இல்லை. இவ்வெற்றியினை விழாவாக எடுப்பதிலும் தவறெதுவும் இல்லை. மேலும், இவ்வெற்றி தமிழர் வீரமும், தியாகமும் வெல்லும் என்பதை உலகிற்கு முரசறைவதினால் தமிழர் இதில் பெருமைப் பட்டுக் கொள்ளலாம்.

---

னரின்முகாம்களுக்கு அத்தியாவசிய பொருள்களை அனுப்பி வைக்கும் விசேட திட்டம் நேற்றுமுன்தினம் முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. வைத்திய உபகரணங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களைஏற்றிய இருபது லொறிகள் இதற்காக கொழும்பிலிருந்துஅநுராதபுரம் நோக்கி நேற்று முன்தினம் காலை புறப்பட்டன. உணவு கூட்டுறவு நிதியுதவியின் மூலம் திரட்டப்பட்ட இப் பொருள்களின் பெறுமதி 25 லட்சம் ரூபா எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உணவுத் திணைக்களத்தின் களஞ்சியசாலைக்கு அருகே நடந்த வைபவத்தில் உணவுத்துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமராச்சி இராணுவத் தளபதி சிசில் வைத்திய ரட்ணாவிடம் இவற்றைக் கையளித்தார்.

## கொள்ளை தொடர்பாக அரசியல்வாதி தேடப்படுகிறார்

(கொழும்பு)

பல இலட்சம் ரூபா பெறுமதியான இரத்தினக் கற்கள் மற்றும் தங்க ஆபரணங்கள் ஆகியன கொள்ளையடிக்கப் பட்டதற்குப் பொறுப்பான கோஷ்டியொன்றின் தலைவரெனச்சந்தேகிக்கப்படும் பொலநறுவைப்பகுதியைச் சேர்ந்தபிரபல அரசியல்வாதி ஒருவரைத்தேடி சி. ஐ. டி. பொலிசார் வலைவிரித்துள்ளனர்.

எம்பிலிப்பிட்டிய பகுதியிலுள்ள இரத்தினக்கல் வியாபாரி ஒருவரின் வீட்டிலிருந்து இப்பொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன

இக்கொள்ளை தொடர்பாகச் சந்தேகிக்கப்படும் அரசியல்வாதி தலைமறைவாகியுள்ளார் என்று சி. ஐ. டி. வட்டாரங்கள் கூறியுள்ளன.

ஆறு பேர் பங்கு கொண்ட இக்கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் பொலநறுவைக் காட்டில் வைத்து கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து கொள்ளையடிக்கப்பட்ட தங்கநகைகள் மற்றும் இரத்தினக்கற்கள் சில மீட்கப்பட்டுள்ளன

## குமாரியில்கொழும்பு செல்ல பயணிகளுக்கு தடை விதிப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து 'குமாரி' கப்பலில் கொழும்புக்குச் செல்வதற்கான பயணிகளை ஏற்றிச் செல்ல திருக்கோணமலை கடற்படை அனுமதி மறுத்ததினால் நேற்று முன்தினம் ஐம்பது பயணிகள் திரும்பிச் செல்ல நேரிட்டது.

இக்கப்பல்மூலம் மேற்குறித்த பயணிகள் செல்வதற்கு கொழும்பு கூட்டுப்படை அனுமதி வழங்கிய போதிலும் திருக்கோணமலை கடற்படையினர் அனுமதி மறுத்ததால் பயணிகள் பயணத்தை தொடரமுடியவில்லை.

பயணிகளை கப்பலில் ஏற்றிச் செல்வது பற்றி 'குமாரி' கப்பல் கப்டன் திருக்கோணமலை கடற்படை அதிகாரிகளோடுதொடர்பு கொண்டபோதிலும் பயணிகளை ஏற்றிச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் கூடுதல் பணத்தை செலவிட்டு துறைமுகத்திற்கு வந்த பயணிகள் சொந்த இடங்களுக்கு திரும்பினர்.

(25)

## எட்டிபொலநகரில் வைத்து 5 தமிழிளைஞர்கள் கைது

(கொழும்பு)

எட்டிபொல நகரத்தில் ஐந்து தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டிருப்பதாக தெரிய வருகின்றது. வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இவர்கள் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிசார் கூறியுள்ளனர்.

சி.செல்லையா பெருமாள், வீரபெருமாள் அழகன் பெருமாள், அழகராயன், மாரிமுத்து ராமச்சந்திரன், ராமசாமி மயில்வாகனம் ஆகிய பெயர்களையுடைய ஐந்து வாலிபர்களுமே கைது செய்யப்பட்டவர்களாவர் எனவும் கூறப்படுகிறது.

---

### நரசிம்மாவுடன் ஜெயலலிதா பேச்சு

இந்தியப் பிரதமர் பி வி. நரசிமமராவை புதுடில்லியில் சந்தித்துப்பேசிய தமிழக முதல்வர் ஜெயலலிதா அண்மைய புயல் மற்றும் மழையினால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு கூடுதலான அளவில் நிவாரணம் வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இந்தச் சந்திப்பு சுமார் ஒரு மணிநேரம் வரை நீடித்ததாக புதுடில்லியில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

## ஏற்றுக்கொள்ள வாழப்பாடி மறுப்பு

(சென்னை)

அ. தி. மு. க மீண்டும் காங்கிரசுடன் கூட்டணி ஏற்படுத்த முயற்சித்து வருகிறது இதன் பொருட்டு முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று முன்தினம் பிரதமர் நரசிம்மராவுடன் பேச்சு நடத்தினார் ஓராண்டுக்கு முன் பாரதிய ஜனதா கட்சியே மத்திய அரசை கைப்பற்றும் என்ற வகையில் இந்திரா காங்கிரசுடனான தனது கூட்டணியை முறித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தற்போது வட மாநில சட்டமன்ற தேர்தலில்காங்கிரஸ் வெற்றிகள் பெற்றதையடுத்து ஜெயலலிதா தம்முடைய பழைய நிலையை மாற்றிக் கொண்டு விட்டதாக தெரிவிக்கப்படுகிறது பேச்சுகளின் போது கூட்டணி குறித்த முடிவை தமிழக காங்கிரஸ் தலைவர்களே தீர்மானிக்க வேண்டும் என பிரதமர் நரசிம்மராவ் கூறியதாகவும் கூட்டணிக்கு தாம் தயாரில்லை என தமிழக காங்கிரஸ் தலைவர்கள் மறுத்து விட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே வேளைதமிழக ஆளுநர் தனது இல்லத்தில் ஒட்டுக் கேட்கும் கருவிகளைதமிழக அரசு பொருத்தியுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சருக்கு புகார் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

---

### ஒரு

இராணுவம் பெரும்பிரசார திட்டமொன்றை எம்மீது ஏற்படுத்தியுள்ளது அதன் மூலம் எமது தரப்பில் இழப்புக்களை பெரிதுபடுத்தி எங்களுடைய தவளை நடவடிக்கையின் வெற்றியை மூடிமறைக்க முயல்கின்றது. வான்படைத் தாக்குதல்கள்மூலம் எமது மக்களை அச்சுறுத்த நினைக்கின்றது.

தவளை நடவடிக்கை மூலம் எமது உரிமைகள் அனைத்தும் முழுமையாக கிடைத்துவிட்டதாக நாங்கள் கருதிவிடக் கூடாது. எமது மக்களின் உரிமை முற்றுமுழுதாக நிலை நாட்டப்பட வேண்டுமேயானால் நாங்கள் இதுபோன்ற பாரிய பல நடவடிக்கைகளை சிறிலங்கா இராணுவத்திற்கு எதிராக மேற்கொள்ளவேண்டிய ஒரு கட்டாயநிலை இருக்கின்றதுஎன்று ஒவ்வொரு மக்களும் புரிந்துகொள்ள வேண்டும். இதேபோன்று பாரிய இழப்புக்களை நாங்கள் சந்திக்கவேண்டிவரும் என்பதையும்புரிந்துகொள்ளவேண்டும்

இத்தவளை நடவடிக்கை எங்கள் தேசியத் தலைவரினால் நன்கு திட்டமிடப்பட்டு வழிநடத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டது. இந்த வகையில் எங்கள் தலைவரின் திட்டமும் வழிகாட்டலும் இதில் அமைந்திருந்ததென்பதை நாங்கள் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ளவேண்டும்

சிறிலங்கா படையை நாம் எடுத்துக் கொண்டோமேயானால் பலதரப்பட்ட பயிற்சிகளையும் எடுத்துக் கொண்டு வருகின்றார்கள். ஆனால் நாங்களோ கடந்தகாலப் போராட்ட அனுபவங்களையும் எங்கள் வீரர்கள் விட்டுச் சென்ற இலட்சிய உணர்வுகளையும் மையமாக வைத்துக்கொண்டு எங்கள் தலைவரின் ஒவ்வொரு திட்டங்களிலும் ஒவ்வொரு இலட்சியங்களிலும் நின்று எங்கள் போராளிகள் வெற்றிகளை ஈட்டித்தந்துகொண்டிருக்கின்றார்கள்.

இரவுபகலாக வருடக்கணக்காக எங்கள் வேவுப் பிரிவினர் மிகவும் திறமையாக இந்த முகாமை வேவுபார்த்திருந்தார்கள். இன்று அந்தப் போராளிகளின் ஒவ்வொரு தரவுகளை வைத்து எங்கள் தலைவர் அவர்களினால் தீட்டப்பட்ட திட்டம் இந்த இராணுவ ரீதியாக எங்களுக்கு முழுமையானவெற்றியை ஈட்டித்தந்திருக்கின்றது. எனவே வரும் காலகட்டங்களில் அனைத்து மக்களும் எங்கள் போராட்டத்துடன் இணைந்து உறுதியுடன் எங்கள் போரில் பங்குபற்றவேண்டும் எனத் தெரிவித்தார்.

## உதை பந்தாட்டம்

சிறிலங்கா அரசின் விமானக் குண்டுவீச்சால்சேதமாக்கப்பட்ட குருநகர் புனித யாகப்பர் ஆலய புனர் நிர்மாண நிதிக்காக, மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியினை 'பாடுமீன்' விளையாட்டுக்கழகம் ஒழுங்கு செய்துள்ளது.

யாழ். மாவட்டத்தின் புகழ்பெற்ற பத்து கழகங்கள் கலந்துகொள்ளும் இச்சுற்றுப் போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகும். ஆட்டங்கள் யாவும் யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

## 16-ம் திகதி அனுப்பப்படும்

தற்சமயம் யாழ். மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற க. பொ. த. சாதாரண தரப்பரீட்சையின் விடைத்தாள்கள் எதிர்வரும் 16 ஆம் திகதிக்குப் பின்னர் கொழும்பு நோக்கி புறப்படவுள்ள கப்பலொன்றில் எடுத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் முடிவடைவதாகவும் அதனை அடுத்து அனைத்து விடைத்தாள்களையும் ஒரேமுறையில் கொழும்பிற்கு எடுத்துச் செல்ல ஏற்பாடாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(பா)

---

### இந்த

தலைமுறைக்கான யுத்தம். இது இந்தத் தலைமுறைக்கான யுத்தமே அல்ல. இது அடுத்த தலைமுறைக்கான யுத்தம் உங்கள்பிள்ளைகளுக்கான யுத்தம் பேரப்பிள்ளைகளுக்கான யுத்தம். இந்த வெற்றியைப் பெற்று அனுபவிக்கப் போகின்றவர்கள் உங்களுடைய பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் தான் என்றார்.

இக் கூட்டத்தில் மகளிர் அமைப்பைச் சேர்ந்த சந்திரிகா பேசும் போது, "இப் பெரும் சமரிலே கலந்து கொண்ட ஒவ்வொரு போராளியும் ஒன்றை உறுதியாக நம்பினார்கள். இந்தப் பூநகரி முகாம் எதிரியின் வடபகுதி பிரதான இராணுவ முகாம்களில் ஒன்று இந்தப் போருக்கு நாங்கள் செல்கிறோம். இந்த முகாமை முற்றாகத் தாக்கி அழித்து அந்த இராணுவ முகாமிலுள்ள வெறியரை நாம் அழிக்க வேண்டும். அங்கிருக்கும் ஆயுதங்களையெல்லாம் அள்ளி எடுக்க வேண்டும் மொத்தத்தில் எங்கள் மக்களின் வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக இருக்கும்- எமது தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து இருக்கும் ஆதிக்க வெறியரை அடித்துக் கலைக்க வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தனர்,

இந்த இராணுவ முகாம் வெற்றிகொள்ளப்படும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம், ஆனால் அந்த வெற்றி எங்களைத் தேடி வரும் வேளையிலே எத்தனை பேர் திரும்பி வருவோம் என்பது எங்களுக்கு தெரியாது ஆனால் ஒன்றுமட்டும் உறுதியாக தெரிகிறது அந்த வெற்றிவிழாவை எமது மக்கள் கொண்டாடுவர். இந்த வெற்றியை கேள்விப்பட்ட எமது பெற்றோர், உறவினர் பெருமைப்படுவார்கள் சந்தோசப்படுவார்கள் என்று கூறி அவர்கள் சண்டைக்குச் சென்றார்கள் என குறிப்பிட்டார்.

---

### யாழ்

நேற்று காலை யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொம்பர் சுற்றுவதைக் கண்டதும் தான் வெளியே ஓடிவரும் போதே குண்டுவீழ்ந்துவெடித்ததாக குண்டுவீச்சுக்கு இலக்காகி படுகாயமடைந்த ஆறுமுகம் இந்திரா தேவி தெரிவித்தார் (சி)

## 1-வது பிறந்ததினவாழ்த்து

12-12-1993



### செல்வன் பாஸ்கரன் பர்மிலன்

கரவெட்டி - வேலணை மேற்கு பாஸ்கரன் - சசி தேவி தம்பதிகளின் செல்வப்புதல்வன் பர்மிலன் தனது 1-வது பிறந்த தினத்தை 12-12-1993 இன்று பிரான்சில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார் இவரை அப்பா. அம்மா, கரவெட்டி அப்பப்பா, அம்மப்பா (கொழும்பு), யாழ்ப்பாணத்திலுள்ள அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா பெரியமாமா மனோ (பிரான்ஸ்) சின்னமாமா - கண்ணன் (பிரான்ஸ்) பெரியன்ரா றஞ்சினி நந்தினி அன்ரா (பிரான்ஸ்) குட்டி அன்ரா (காந்தி) தம்பி திவ்யன் மாமா அத்தைமார் (பிரான்ஸ்) சித்தப்பா (பிரான்ஸ்) மச்சான் மார் மச்சாள்மார் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் முடிப்பிள்ளையார் அருளுடன் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

தகவல்

(6847) மகாலிங்கம் குடும்பம்

## தமிழீழ மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம்

### வழக்கு இல: 03 | குடும்பம் | 93.

திருமதி ரதி தர்மரத்தினம்
34, செட்டித் தெரு ஒழுங்கை,
நல்லூர்.

**வழக்காளி**

**எதிர்**

திரு. பாலசுப்பிரமணியம்
தர்மரத்தினம்
நடராசா ஒழுங்கை,
வல்வெட்டிததுறை.

**தற்போது**

உருத்திரா மாவத்தை,
கொழும்பு - 06.

**எதிராளி**

இத்தாற் சகலருமறிக. 34, செட்டித்தெரு ஒழுங்கை நல்லூரைச் சேர்ந்த திருமதி ரதி தர்மரத்தினம் என்பவா நடராசா ஒழுங்கை வலவெட்டித்துறையைச்

## 31ஆம் நாள் நினைவலைகள்



வீரச்சாவு:

**11-11-93**

### வீரவேங்கை திலகன்

( மிக்கேல் யேசுதாசன் (தாசன்) )

(மெலிஞ்சிமுனை, தீவகம்)

விதையாகி வீழ்ந்தாய் மண்ணில்
விடுதலைப் பயிராகி எழுந்தாய் எம்மில்
புலிவீரம் புகழ்பாடிச் சென்றாய்
புயலாகி பூநகரி வென்றாய்

களமாடும் தலைவன் நிழலாகி நின்றாய்
களம்மீது நீயும் கனலாகிப் போனாய்
காலமெலாம் நின்புகழ் நிலைக்குமையா
களமாட நாமும் வருகின்றோம்.

சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இன்று நிகழும் மதிய நினைவுகூரலில் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

பெற்றோர்.

பண்டிதர் குடியிருப்பு.
கிளாலி (6865)

## மரண அறிவித்தல்கள்

### மரியாம்பிள்ளை சூசைப்பிள்ளை

பருத்தித்துறை புனித தோமையார் பதியைச் சேர்ந்த மரியாம்பிள்ளை சூசைப்பிள்ளை அவர்கள் 10-12-1993இல் அவரது இல்லத்தில் காலமானார். இவர் லூசியாவின் அன்புக் கணவரும், திரு. அந்தோனிப்பிள்ளையின் அன்புத் தந்தையும், திருமதி கேசல் அந்தோனிப்பிள்ளையின் மாமனாரும், திருமதி மேரிப்பிள்ளை பஸ்தியாம்பிள்ளையின் சகோதரரும், திருமதி ஞானம் யேசுநேசன், மதுரநாயகம் (சுவிஸ்), திருமதி ராஜி தவராசா (நோர்வே), திருமதி சுலோஜி குலரட்ணம், ஜீவநாயகம் (சுவிஸ்), ராஜா, மெரீனா திரு யேசுநேசன் (பருத்தித்துறை கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்) திரு தவராசா (நோர்வே), திரு. குலரட்ணம் ஆகியோரின் அன்புப் பேரனும், ஷெரின், சின்ரியா, தர்ஷினி, அனந் ( நோர்வே ), ... ( நோர்வே ), கல்யாணி ( நோர்வே ), துஷ்யந்

## 5 இலங்கை மீனவர் தமிழகத்தில் கைது

(சென்னை), கன்னியாகுமரிப் பகுதியில் இலங்கை மீனவர்கள் ஐவர் இந்திய கடலோர காவற் படையினரால் கைது செய்யப்பட்டனர், இவர்கள் விசாரணையின் பொருட்டு தமிழக பொலிசாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

## யாழ். பல்கலைக்கழக ஒளி விழா

இன்று மாலை பி. ப. 3-00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெற இருந்த ஒளிவிழா நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தினால் 13-12-93 திங்கட் கிழமை மாலை 3-00 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ கத்தோலிக்க
((6870) மாணவர் ஒன்றியங்கள்

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 10 - 12 - 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:-11660
வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்:
27-2088.
வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கம்:
இல்லை.

### 11 - 12 - 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11678
வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்:
இல்லை.
வடபதிக்கு வெளியே சென்ற வாகள இலக்கங்கள்:
27-5482, 26-1609, 41-9579, 42-9345, 26 8674
26-4648, 43-1019, 26-8746, 24-5394, 28-6640
24-9773, 26-1495, 28-9449, 26-58'0, 27-7043
27-1292, 41-7865, 42-1494, 24-5437, 26-0403
42-9326.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லர் செட்டிச்சி

திருமதி செல்லர் செட்டிச்சி 11. 12. 93 அன்று காலமானார் இவர் காலம்சென்ற திரு செல்லர் அவர்களின் அன்பு மனைவியும், தர்மலிங்கம் (கட்டட ஒப்பந்தகாரர், வேலணை மேற்கு 6-ம் வட்டாரம்) பவளம், பொன்னம்மா, அரியசோதி, பொன்மலர், அற்புதமலர் ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று(12. 12. 93) பகல் 12 மணிக்கு, நவாலி முருகமூர்த்தி கோயில் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று கொத்துக்கட்டியடி மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்

செ. தர்மலிங்கம்
(மகன்)

(6866)

### கணபதிப்பிள்ளை இராஜகோபால்

## வேண்டுகோள்

யாழ் மாவட்ட திரிசாரணர் குழுவைச் சேர்ந்த அனைவரையும் இன்று ஞாயிறு பிற்பகல் பன்னிரண்டு மணியளவில் யாழ் பல்கலைக் கழகத்திற்கு சீருடையுடன் தவறாது சமுகம் தரும்படி திரிசாரணர் குழுச் செயலாளர் வேண்டுகோள். விடுத்துள்ளார்.

## வெற்றிநாள்

வகுப்பு நிகழ்வும், சுன்னாகம் சந்தியிலிருந்து துவிச்சக்கரவண்டிப் பேரணி ஒன்று ஆரம்பமாகி, கூட்ட மைதானத்தை வந்தடையும்.

## மார்க்கோ

யாழ். பல்கலைக்கழகத்திற்கு டீசல் 16 பரல், பெற்றோல் 02 பரல், என்ஜின் ஒயில் 01 பரல் சைக்கிள் ரயர் ரியூப் ஆகியனவும் இக் கப்பலில் எடுத்து வரப்பட்டன

இக் கப்பலில் தபால்பொதிகள் எதுவும் எடுத்து வரப்படவில்லையென இக்கப்பலின் கப்டன் எமது செய்தியாளருக்குத் தெரிவித்தார். அதே சமயம் கப்பல் பிரதம அலுவலர் பயணிகளை இறக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது அவருக்கு கையில் காயம் ஏற்பட்டது. (யோ)

## பல்லாயிரம்

பாளர் தலைமையில் மௌன அஞ்சலியுடன் ஆரம்பமாகியது. தலைமை உரையை அடுத்து விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்வி சந்திரிகா, பூநகரி கூட்டுத்தளம் தகர்ப்பில் பங்கு கொண்ட மூத்த தளபதி கருணா ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

விழாவில் இரு புகைக் கூடுகள் வானில் பறக்கவிடப்பட்டன. பூநகரி முகாம் தகர்ப்பு காட்சிகளை சித்திரிக்கும் பெரியளவிலான வர்ண ஓவியங்கள் கூட்டமைதானத்தில் வைக்கப்பட்டிருந்தன. பெருமளவு மக்கள் இதில் கலந்து கொண்டனர்.

பூநகரி கூட்டுப்படை முகாம் தகர்ப்பில் வீரகாவியம் படைத்து வீரச்சாவெய்திய 458 மாவீரர்களது உருவப் படங்கள் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தல் ஒன்றில் வைக்கப்பட்டு தீபங்கள் ஏற்றப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

நேற்றுக்காலை 10 30 மணிக்கு இப் பந்தலுக்கு முன்னால் அமைக்கப் பட்டிருந்த தமிழீழ தேசியக் கொடியை தென்மராட்சி அரசியல் துறை பொறுப்பாளர் கலை

## தமிழீழ மாவட்ட நீதிமன்றம்
## யாழ்ப்பாணம்

**வழக்கு இல: 03 | குடும்பம் | 93.**

திருமதி ரதி தர்மரத்தினம்
34, செட்டித் தெரு ஒழுங்கை,
நல்லூர்.

**வழக்காளி**

**எதிர்**

திரு. பாலசுப்பிரமணியம்
தர்மரத்தினம்
நடராசா ஒழுங்கை,
வல்வெட்டிததுறை;

**தற்போது**

உருத்திரா மாவத்தை,
கொழும்பு - 06.

**எதிராளி**

இத்தாற் சகலருமறிக. 34, செட்டித்தெரு ஒழுங்கை நல்லூரைச் சேர்ந்த திருமதி ரதி தர்மரத்தினம் என்பவா நடராசா ஒழுங்கை வலவெட்டித்துறையைச் சேர்ந்த திரு. பாலசுப்பிரமணியம் தர்மரத்தினம் என்பவருக்கு எதிராக இந்த நீதிமன்றில் தமக்கும் குறித்த எதிராளிக்கும் இடையே 1983 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 28ஆம் திகதி நடைபெற்ற பதிவுத் திருமண மூலம் ஏற்பட்ட திருமண உறவை நீக்கி விவாகரத்து வழங்குமாறும் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

எனவே வழக்காளியின் கோரிக்கையை இம்மன்று பரிசீலிப்பதற்கு எதிராக ஆட்சேபனை ஏதும் இருப்பின் இவ் அறிவித்தல் பத்திரிகையில் விளம்பரப்படுத்திய திகதியிலிருந்து ஒரு மாத காலத்தினுள் தமது ஆட்சேபனையை இம்மன்றில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,

**பதிவாளர்**

1993 ஆம் ஆண்டு மார்கழி மாதம்
6ஆம் திகதி
தமிழீழ மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.
(6813)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

'ஒப்ரேசன் தவளை' பூநகரிச் சமரில் வீரச்சாவடைந்த
உமையாள்புரம் ஆனையிறவைச் சேர்ந்த

# கப்டன் பிறைசூடி (மதீஸ்)
## (சுப்பிரமணியம் சுவேந்திரன்)

**தாயின் மடியில்:** 15- 03- 1971
**தாயக மண்ணில்** 11- 11- 1993

இவருக்கு எமது இதய அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம். இவருடன் வீரச்சாவைத்தழுவிக்கொண்ட ஏனைய மாவீரர்களுக்கும் எம் இதய அஞ்சலியையும் அவர்களின் குடும்பத்தாருக்கும் எமதுஅனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

-குடும்பத்தினர்

3ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை. (6868)

---

# மரண அறிவித்தல்கள்

## மரியாம்பிள்ளை சூசைப்பிள்ளை

பருத்தித்துறை புனித தோமையார் பதியைச் சேர்ந்த மரியாம்பிள்ளை சூசைப்பிள்ளை அவர்கள் 10-12-1993இல் அவரது இல்லத்தில் காலமானார். இவர் லூசியாவின் அன்புக் கணவரும், திரு. அந்தோனிப்பிள்ளையின் அன்புத் தந்தையும், திருமதி கேசல் அந்தோனிப்பிள்ளையின் மாமனாரும், திருமதி மேரிப்பிள்ளை பஸ்தியாம்பிள்ளையின் சகோதரரும், திருமதி ஞானம் யேசுநேசன், மதுரநாயகம் (சுவிஸ்), திருமதி ராஜி தவராசா (நோர்வே), திருமதி சுலோஜி குலரட்ணம், ஜீவநாயகம் (சுவிஸ்), ராஜா, மெரீனா திரு யேசுநேசன் (பருத்தித்துறை கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்) திரு தவராசா (நோர்வே), திரு. குலரட்ணம் ஆகியோரின் அன்புப் பேரனும், ஷெரின், சின்ரியா, தர்ஷினி, அனந் (நோர்வே), முரளி (நோர்வே), கல்யாணி (நோர்வே), துஷ்யந்தன், மெலோனி அவர்களின் அன்புப்பூட்டனுமாவார்.

அன்னாரது நல்லடக்கம் 11- 12 -1993இல் பருத்தித்துறை கோரியடி சேமக்காலையில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

**MS அந்தோனிப்பிள்ளை**
(மகன்)

சென். தோமஸ் லேன்,
பருத்தித்துறை. (6853)

---

## திரு. சிதம்பரப்பிள்ளை மாணிக்கவாசகர்

மந்துவில் வடக்கைச் சேர்ந்த பிரபல சமூக சேவையாளரும், மந்துவில் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம், ஸ்ரீகாந்தன் சனசமூக நிலையம் என்பவற்றின் தலைவருமாகிய திரு. சி. மாணிக்கவாசகர் 11-12-93 (சனிக்கிழமை) அகால மரணமானார். இவர் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை, திருமதி சி. சிவக்கொழுந்து ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சர்மிளா, நிர்மலா, காந்தரூபி, நந்தகுமார், அரவிந்தன் ஆகியோரின் அன்புத்தந்தையும், தி, கருணாதேவி, சு. செல்வராணி, ச. சகுந்தலாதேவி, ச. இந்திராணி, ந. புஸ்பராணி சி. தனபாலசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 12-12-93 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் மந்துவில் வடக்கு தச்சகாடு மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

(6867) **குடும்பத்தினர்**

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லர் செட்டிச்சி

திருமதி செல்லர் செட்டிச்சி 11. 12. 93 அன்று காலமானார் இவர் காலம்சென்ற திரு செல்லர் அவர்களின் அன்பு மனைவியும், தர்மலிங்கம் (கட்டட ஒப்பந்தகாரர், வேலணை மேற்கு 6-ம் வட்டாரம்) பவளம், பொன்னம்மா, அரியசோதி, பொன்மலர், அற்புதமலர் ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று(12. 12. 93) பகல் 12 மணிக்கு, நவாலி முருகமூர்த்தி கோயில் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று கொத்துக்கட்டியடி மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்

**செ. தர்மலிங்கம்**
(மகன்)

(6866)

---

## கணபதிப்பிள்ளை இராஜகோபால்

வேலணை மேற்கு, 7-ம் வட்டாரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை இராஜகோபால் 10-12-93 வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற அருளம்பலம்-சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், திருவருட்செல்வியின் அன்புக் கணவரும், மதிவதனா (ஆசிரியை யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை), மதிகரன் (பிரான்ஸ்), ஜெயகரன், றஜிவதனா, சிறிகரன், பாலகரன், ஜெயவதனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகுமாரின் அன்பு மாமனாரும் நவரத்தினம்மா, நாகநாதபிள்ளை, விநாயகமூர்த்தி, பாலசுப்பிரமணியம், பேரின்பநாயகம் (இன்பம்), இரத்தினசிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரரும், கந்தவேள், தணிகாசலம், செல்வரெட்டினம், செந்தமிழ்ச்செல்வி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-12-93) அவரது இல்லத்தில் (ஸ்ரேசன் றோட், கொக்குவில்) நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் காலை 10 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்

திருமதி தி. இராஜகோபால்

அகிம்சகிரி,
கொக்குவில். (6854)

---

## கந்தவனம் செல்லம்மா

வீமன்காமம் வடக்கை பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கோண்டாவில் திலீபன் வீதியில் வசித்தவருமாகிய கந்தவனம் செல்லம்மா 11-12-93-ல் காலமானார். இவர் காலஞ் சென்ற கந்தவனத்தின் அன்பு மனைவியாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (12-12-93) இரண்டு மணியளவில் கோண்டாவில் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக கோண்டாவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

க. தில்லைநடராசா
(மருமகன்)

திலீபன் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (6869)

---

பில் பங்கு கொண்ட மூத்த தளபதி கருணா ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

விழாவில் இரு புகைக் கூடுகள் வானில் பறக்கவிடப்பட்டன. பூநகரி முகாம் தகர்ப்பு காட்சிகளை சித்திரிக்கும் பெரியளவிலான வர்ண ஓவியங்கள் கூட்டமைதானத்தில் வைக்கப்பட்டிருந்தன. பெருமளவு மக்கள் இதில் கலந்து கொண்டனர்.

பூநகரி கூட்டுப்படை முகாம் தகர்ப்பில் வீரகாவியம் படைத்து வீரச்சாவெய்திய 458 மாவீரர்களது உருவப் படங்கள் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தல் ஒன்றில் வைக்கப்பட்டு தீபங்கள் ஏற்றப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

நேற்றுக்காலை 10 30 மணிக்கு இப் பந்தலுக்கு முன்னால் அமைக்கப் பட்டிந்த தமிழீழ தேசியக் கொடியை தென்மராட்சி அரசியல் துறை பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றி வைத்தார். உருவப்படங்களுக்கு நீண்ட வரிசையில் நின்று மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

(சி)(பா)(86)

---

## இம்மாத

தக்கது.

சிறிலங்கா இராணுவத் தளபதியாக லெப்.ஜெனரல் சிசில் வைத்தியரட்ன 1991 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம்திகதி பதவி ஏற்றார்.

சிசில் வைத்தியரட்ன வடபகுதி தளபதியாக 1984இல் முதற்தடவையாக பதவி ஏற்றிருந்தார். அப்போது பிரிகேடியர் ஆரியப்பெருமா கண்ணிவெடியில் கொல்லப்பட்டதையடுத்தே அவரின் இடத்திற்கு சிசில் நியமிக்கப்பட்டார். எனினும் சிசில் விரைவில் வடபகுதியிலிருந்து மாற்றலாகி சென்றுவிட்டார். தென் பகுதியில் ஜே. வி. பிக்கு எதிரான நடவடிக்கைக்கு இவர் தலைமை தாங்கினார். மேற்கு, சப்பிரகமுவ, தென், ஊவா, மத்திய மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்ட ஜே வி. பி. எதிர்ப்பு நடவடிக்கைகளை அவர் நெறிப்படுத்தினார். மூன்று மாதங்களில் இம் மாகாணங்களில் இவர் ஜே.வி.பி நடவடிக்கைகளை முறியடித்தமைக்காக அப்போது புகழப்பட்டார். இராணுவத்தில் நான்கு படைப்பிரிவுகள் இவரின் தலைமையின் கீழ் கொண்டுவரப்பட்டன. கவசப்படையின் முதலாவது வேவுப்பிரிவு, சிங்கரெஜிமன்டின் முதலாவது படைப்பிரிவு, ரஜரட்ட ரைபிளின் முதலாவது பட்டாலியன் மின்னியல், பொறியியல் இயந்திரவியல் படைப்பிரிவு என்பனவே இவரின் கீழ் இயங்கின.